Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, JULY 19, 2024

வெள்ளிக்கிழமை ஜூலை 19, 2024 | ஒளி: 10 கதிர்: 298 | பக்கம்:07 | நகரப்பதிப்பு★ | FREE



## ஞானசார தேரருக்கு பிணை

நான்கு வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட கலகொடஅத்தே ஞானசார தேரரை பிணையில் விடுவிக்க மேன்முறையீட்டு நீதிமன்றம் வியாழக்கிழமை (18) உத்தரவிட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# கணித ஆசிரியரால் டியூஷன் தடை

**பாடசாலை நேரத்திலோ, பின்னரோ, வார இறுதி நாட்களிலோ தனியார் வகுப்புகள் கருத்தரங்குகள் நடத்துவது முற்றாகத் தடை**

வடமத்திய மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர்கள், ஆசிரியர் ஆலோசகர்கள் மற்றும் ஆசிரியர்கள், பிரத்தியேக வகுப்புகளில் பணியாற்றுவதை முற்றாகத் தடை செய்து வடமத்திய தலைமை அமைச்சின் செயலாளர் சுற்றறிக்கை வெளியிட்டுள்ளார்.

மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள், அனைத்து பிராந்தியப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள் ஆகிய அனைவருக்கும் இந்த சுற்றறிக்கையை வடமத்திய மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் சிறிமேவன் தர்மசேன அனுப்பி வைத்துள்ளார்.

தொடர்ச்சி P2



## கணிதம் கற்பித்த ஆசிரியர் இடைநீக்கம்

உயர்தர மாணவர்களுக்கு சிக்கலான கணித பாடமொன்றைக் கற்பித்த ஆசிரியர் ஒருவர் இடைநீக்கம் செய்யப்பட்டார்.

பாடசாலைக்கு சமுகமளிக்காது, உயர்தர வகுப்பு மாணவர் குழுவுக்குப் பணத்துக்காகப் பிரத்தியேக வகுப்பை நடத்தினார் என்ற குற்றச்சாட்டிலேயே அந்த ஆசிரியரை இடைநீக்கம் செய்துள்ளதாக வடமத்திய மாகாணக் கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.டபிள்யூ. சமரக்கோன் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### ஊடகங்களின் முன்பாக வாக்குமூலம் பெற்ற அதிகாரிகளுக்கு

# "தண்டனை வழங்கப்படாது"

**'கிளப் வசந்த' நாட்டுக்கு கடனாளி என்கிறார் அமைச்சர் டிரான்**

**இந்த தவறை மீண்டும் செய்யவேண்டாம் என எச்சரித்துள்ளேன்**



அத்துருகிரியவில் சுட்டு படுகொலைச் செய்யப்பட்ட 'கிளப் வசந்த' என்றழைக்கப்படும் வர்த்தகர் சுரேந்திர வசந்த பெரேராவின் படுகொலை தொடர்பில் கைது செய்யப்பட்ட பச்சை குத்தும் நிலையத்தின் உரிமையாளரிடம் ஊடங்களின் முன்னிலையில் வாக்குமூலம் பெற்றார் என குற்றஞ்சாட்டப்பட்டுள்ள பிரதி பொலிஸ்மா அதிபர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு எதிராக எவ்விதமான ஒழுக்காற்று நடவடிக்கைகளோ அல்லது விசாரணைகளோ முன்னெடுக்கப்படமாட்டாது என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

மேல் மாகாண பிரதி பொலிஸ்மா அதிபர் தலைமையிலான குழுவினர் சந்தேகநபர் ஒருவரை விசாரணை செய்யும் வீடியோ வெளியாகியுள்ளது.

தொடர்ச்சி P2




### ஜனாதிபதித் தேர்தல்

## நிதியை தாமதமின்றி விடுவிக்க ஒப்புதல்

ஜனாதிபதி தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட 10 பில்லியன் ரூபாய் நிதியைத் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தேவைக்கேற்ப தாமதமின்றி வழங்குவதாக நிதியமைச்சின் செயலாளர் உறுதியளித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## பைடனுக்கு கொரோனா

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. மேலும் கொரோனா பாதிப்புக்கான லேசான அறிகுறிகளைக் காட்டுவதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

இதுதொடர்பான வெள்ளை மாளிகை வெளியிட்ட அதிகாரப்பூர்வ அறிவிப்பில், "ஜனாதிபதி ஜோ பைடனுக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. அவர் ( ஜோ பைடன்) டெலாவேருக்குத் திரும்புவார், அங்கு அவர் சுயமாகத் தனிமைப்படுத்தப்படுவார். அந்த நேரத்தில் தனது அனைத்து கடமைகளையும் முழுமையாகச் செய்வார்" என்று தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2



## "திருத்தம் வேண்டாம்; தேர்தலை நடத்து"

அரசியலமைப்பு திருத்தங்கள் அல்ல, ஜனாதிபதித் தேர்தலை நடத்துவதே இந்த தருணத்தில் நாட்டிற்குத் தேவையாகும் என ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## "குழந்தைகள் முன்னிலையில் புகைபிடிப்பதைத் தவிர்க்கவும்"

குழந்தைகள் முன்னிலையில் புகைபிடிப்பதைத் தவிர்க்குமாறு பெற்றோரை வலியுறுத்தும் கடுமையான ஆலோசனையை மருத்துவ நிபுணர்கள் வழங்கியுள்ளனர். குழந்தை நோயாளிகளிடையே மூச்சுத்திணறல் குறிப்பிடத்தக்க அதிகரித்துள்ளது என்பதை மேற்கோள் காட்டி இந்த ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

இன்ஃப்ளூயன்ஸா போன்ற நோய்களை நினைவூட்டும் வைரஸ் தொற்றுகளைத் தொடர்ந்து இந்த அதிகரிப்பு ஏற்படுகிறது என லேடி ரிட்ஜ்வே மருத்துவமனையின் குழந்தை நல ஆலோசகர் டாக்டர்.தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## சஜித் அணியில் மூவருக்கு சிக்கல்

பாராளுமன்ற உறுப்பினர்களான பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா, ராஜித சேனாரத்ன, குமார வெல்கம ஆகியோருக்கு கட்சியின் கூட்டங்கள், நிகழ்வுகள் மற்றும் ஏனைய நடவடிக்கைகளில் கலந்துகொள்வதற்கு இடமளிப்பதில்லையென ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

தொடர்ச்சி P2

### மலையக மக்களுக்கு நிரந்தர காணி, வீட்டு

## உரிமைகளை வழங்குவதே அரசாங்கத்தின் நோக்கம்



பெருந்தோட்ட மக்கள் வாழும் பிரதேசங்களை இனங்கண்டு, அப்பகுதிகளைப் புதிய குடியேற்றக் கிராமங்களாக சட்டரீதியாக பிரகடனப்படுத்துவதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

தொடர்ச்சி P2



## 'பிரெஸ்டீஜ் பால்கன்' இல் இருந்து ஒன்பது பேர் மீட்பு

ஓமான் கடற்பிராந்தியத்தில் 'பிரெஸ்டீஜ் பால்கன்' எனும் இந்த டேங்கர் எனும் எண்ணெய் தாங்கிக் கப்பல் மூழ்கியதில் காணாமல் போயிருந்த 16 பேரில் 9 பேர் மீட்கப்பட்டுள்ளனர். மீட்கப்பட்ட 9 பேரில் ஒருவர் இலங்கையைச் சேர்ந்தவர் என்பதுடன், எஞ்சிய 8 பேரும் இந்தியப் பிரஜைகள் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2

## தமிழக மீனவர்களை தமிழகம் கொண்டு வரும்

**மத்திய அரசு மீது உயர் நீதிமன்ற மதுரைக் கிளை நம்பிக்கை**



"தமிழக மீனவர்களும் இந்திய குடிமக்கள் தான். தமிழக மீனவர்களின் பாதுகாப்பு முக்கியமானது" என மத்திய அரசுக்கு உயர் நீதிமன்ற மதுரைக் கிளை அறிவுறுத்தியுள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# கணித ஆசிரியரால் டியூஷன் தடை

குறித்த சுற்றறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

வடமத்திய மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் சில அதிபர்கள், ஆசிரியர் ஆலோசகர்கள் மற்றும் ஆசிரியர்கள் பாடசாலைகளில் மாணவர்களிடம் பணம் வசூலித்து தனியார் வகுப்புகள் மற்றும் கருத்தரங்குகளைப் பாடசாலை நேரத்தில் , பாடசாலை நேரம் முடிந்தது அல்லது வார இறுதி நாட்களில் நடத்துவதாகத் தொடர்ந்து முறைப்பாடுகள் வந்துள்ளன .

சில ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் பாடசாலையில் கற்பித்தல் பணியை முறையாகச் செய்யாததுடன், தங்களின் பிரத்தியேக வகுப்புகள் மற்றும் கருத்தரங்குகளுக்குச் செல்லாத மாணவர்களை அலட்சியப்படுத்துவதுடன், பல்வேறு துன்பங்களுக்கும் உள்ளாக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய வடமத்திய மாகாணத்தில் உள்ள பாடசாலை மாணவர்களிடம் பணம் வசூலிப்பதும், பாடசாலை நேரத்திலோ, பாடசாலை நேரத்திற்குப் பின்னரோ அல்லது வார இறுதி நாட்களிலோ தனியார் பயிற்சி வகுப்புகள் மற்றும் கருத்தரங்குகள் நடத்துவது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளதாக சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், இந்த சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றாதவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என வடமத்திய மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் குறிப்பிட்டுள்ளார்.



# ஞானசார தேரருக்கு பிணை

ஞானசார தேரரால் சமர்ப்பிக்கப்பட்ட மறுசீராய்வு மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்டதன் பின்னரே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர் சம்பத் அபேகோன் உள்ளிட்ட மேன்முறையீட்டு நீதிபதிகள் குழாம் முன்னிலையில் இந்த மனு பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

ஞானசார தேரரை 50,000 ரூபாய் பிணையிலும் 5 இலட்சம் ரூபாய் பெறுமதியிலான 2 சரீர பிணைகளிலும் விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பில் 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற ஊடக சந்திப்பொன்றில் தெரிவித்த கருத்தின் ஊடாக இன, மத நல்லிணக்கத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தியமை உள்ளிட்ட 2 குற்றச்சாட்டுகள் தொடர்பில் குற்றவாளியாகக் காணப்பட்டதை அடுத்து தேரருக்கு 4 வருடக் கடூழிய சிறைத்தண்டனை விதிக்கப்பட்டிருந்தது.



# பைடனுக்கு கொரோனா

இதுதொடர்பாக ஜனாதிபதி ஜோபைடன் தனது எக்ஸ் வலைதளத்தில், "இன்று மதியம் எனக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதியானது, நான் தற்போது நன்றாக இருப்பதாக உணர்கிறேன், அனைவரின் வாழ்த்துக்களுக்கும் நன்றி. நான் குணமடைவதற்காக தனிமைப்படுத்திக் கொள்ள உள்ளேன். அந்த நேரத்தில் அமெரிக்க மக்களுக்கான பணியை தொடர்ந்து செய்வேன்" என்று அதில் பதிவிட்டுள்ளார்.

81 வயதான பைடன், லாஸ் வேகாசில் நடந்த என்.ஏ.ஏ.சி.பி. தேசிய மாநாட்டில் கலந்து கொண்டநிலையில், நேற்று அவருக்கு நடத்தப்பட்ட சோதனையில் கொரோனா இருப்பது உறுதிசெய்யப்பட்டது. முன்னதாக அந்த மாநாட்டில் பேசிய அவர் டொனால்டு டிரம்பின் கொள்கைகளை கடுமையாக விமர்சித்தார். மேலும் நாட்டில் துப்பாக்கி வன்முறை அதிகரிப்பதை கடுமையாக கண்டித்தார்.

# "தண்டனை வழங்கப்படாது"

இது தொடர்பில் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுமா என்ற கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர் டிரான் அலஸ், "இந்த தவறை மீண்டும் செய்யவேண்டாம் என கடுமையாகத் தான் எச்சரித்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

அந்த பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுக்குமாறு பொலிஸ் மா அதிபருக்குத் தான் பணிக்கவில்லை என்றார்.

அத்துருகிரிய துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் இருவரைத் தவிர ஏனைய அனைவரும் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். 'கிளப் வசந்த' சுட்டுக்கொல்லப்பட்டபோது, நாடுமுழுவதும் கடன்பட்டிருந்தார். கையில் பணம் இல்லாதவராகவே இருந்தார் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

கிளப் வசந்த ஆடம்பர வாழ்க்கையை வாழ்வதான காணொளிகள் பல்வேறு சமூக ஊடகங்கள் ஊடாக பரப்பப்பட்டாலும், அவரது தொழில்கள் வங்குரோத்து நிலையில் உள்ளன, அவர் நாட்டுக்குக் கடனாளி எனவும் அமைச்சர் தெரிவித்தார்.



# "திருத்தம் வேண்டாம்; தேர்தலை நடத்து"

நாட்டின் பொருளாதாரப் பிரச்சினை 2028ஆம் ஆண்டு வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்த ரணவக்க, 2028ஆம் ஆண்டிற்குப் பின்னர் அரசாங்கத்திற்குக் கடனை செலுத்துவதற்கான வேலைத்திட்டம் தேவை என்றார்.

அப்போது, நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் திட்டத்தைக் குடியரசு முன்னணி முன்வைத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

கம்பஹாவில் நடைபெற்ற 'நாட்டிற்கு ஒருமித்த படி' நடைமுறை நிகழ்ச்சித் திட்டத்தின் சுருக்கம் அடங்கிய துண்டுப் பிரசுர விநியோகம் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே சம்பிக்க ரணவக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# கணிதம் கற்பித்த ஆசிரியர் இடைநீக்கம்

இடைநீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர், அநுராதபுரம் பாடசாலையொன்றில் கற்பிப்பவர் என்பது தெரியவந்துள்ளது.

இந்த ஆசிரியர், பாடசாலை நேரங்களில் மாணவர்களுக்குப் பிரத்தியேக வகுப்புகளில் பணத்துக்காகக் கற்பிப்பதாகப் பெற்றோர்கள் குழுவொன்று மாகாண கல்விப் பணிப்பாளரிடம் முறைப்பாடு செய்திருந்தது.

அந்த முறைப்பாட்டின் பேரில், மாகாணக் கல்விப் பணிப்பாளர், ஏனைய பணியாளர்கள் குழுவுடன் இணைந்து பாடசாலையை ஆய்வு செய்த போது, இந்த ஆசிரியர், பாடசாலைக்குச் சென்று, ஆசிரியர்களின் வருகைப் பதிவேட்டில் கையொப்பமிட்டு, பாடசாலைக்கு வெளியே சென்று பிரத்தியேக வகுப்பில் மாணவர்களுக்குக் கற்பித்ததைக் கண்டுபிடித்தனர்.

இவ்வருடத்தில் இதுவரையிலும் எவ்வித அதிகார சபையின் அங்கீகாரமும் இன்றி இந்த ஆசிரியர் 26 நாட்கள் விடுமுறை எடுத்துள்ளதாகவும் மாகாண கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

இதன்படி, குறித்த ஆசிரியரை மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ்.எம்.டபிள்யூ. சமரக்கோன், புதன்கிழமை (17) முதல் அமுலுக்கு வரும் வகையில் பணி இடைநிறுத்தம் செய்திருந்தார்.

# நிதியை தாமதமின்றி விடுவிக்க ஒப்புதல்

நிதி அமைச்சின் செயலாளர் மற்றும் தேர்தல்கள் ஆணைக்குழு இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் இந்த உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

அரசாங்கம் கடுமையான நிதி முகாமைத்துவத்துடன் செயற்படுவதால் குறித்த நிதியை வழங்குவதில் எவ்வித தடையும் இல்லை என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டி தெரிவித்துள்ளார்.

தபால் சேவைகள், அச்சிடும் பணிகள் மற்றும் பாதுகாப்பிற்கான செலவுகளை வழங்கத் தயாராக உள்ளதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

# "குழந்தைகள் முன்னிலையில் புகைபிடிப்பதைத் தவிர்க்கவும்"

**மீண்டும் மீண்டும் சுவாச பிரச்சினைகள் ஏற்படுவதற்கான வாய்ப்பையும் அதிகரிக்கிறது**

"சிறுவர்களில் மூச்சுத்திணறல் ஏற்படுவதை நாங்கள் அவதானித்துள்ளோம், இது பெரும்பாலும் புகைப்பிடிப்பதால் தூண்டப்படுகிறது அல்லது அதிகரிக்கிறது" என்று டாக்டர் பெரேரா கூறினார்.

"மூச்சுத்திணறல், மூச்சுத்திணறலின் போது உச்சகட்ட விசில் ஒலியாக வெளிப்படுகிறது, மேலும் சுவாசப் பாதை சுருங்குவதைக் குறிக்கலாம், இது சுவாசிப்பதில் சிரமத்திற்கு வழிவகுக்கும்" என்று அவர் விளக்கினார்.

குழந்தைகளின் சுவாச ஆரோக்கியத்தில் புகைப்பிடிப்பதால் ஏற்படும் தீங்கான விளைவுகளை எடுத்துரைத்த டாக்டர் பெரேரா, "இரண்டாம் நிலை புகையை வெளிப்படுத்துவது மூச்சுத்திணறல் அறிகுறிகளை மோசமாக்குவது மட்டுமல்லாமல், மீண்டும் மீண்டும் சுவாச பிரச்சினைகள் ஏற்படுவதற்கான வாய்ப்பையும் அதிகரிக்கிறது" என்று வலியுறுத்தினார்.

குழந்தைகளுக்கு மூச்சுத் திணறலைக் குறைக்கப் புகை இல்லாத சூழலை உருவாக்குவதன் முக்கியத்துவத்தை அவர் வலியுறுத்தினார்.

புகைபிடித்தல் பற்றிய ஆலோசனைக்கு மேலதிகமாக, மூச்சுத்திணறல் அத்தியாயங்களை நிர்வகிப்பதில் இன்ஹேலர்களைப் பயன்படுத்துவது குறித்துப் பெற்றோருக்கு வலியுறுத்தினார்.

"சுகாதார வழங்குநர்களால் பரிந்துரைக்கப்படும் இன்ஹேலர்கள் மூச்சுத்திணறலைத் தணிப்பதிலும் சுவாச செயல்பாட்டை மேம்படுத்துவதிலும் பாதுகாப்பானவை மற்றும் பயனுள்ளதாக இருக்கும்" என்று அவர் உறுதிப்படுத்தினார்.

நாள்பட்ட இருமல் மற்றும் தொடர்ந்து மூச்சுத்திணறல் போன்ற அறிகுறிகளுக்குப் பெற்றோர்கள் விழிப்புடன் இருக்குமாறு டாக்டர் பெரேரா வலியுறுத்தினார்,

# உரிமைகளை வழங்குவதே அரசாங்கத்தின் நோக்கம்

அதன் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் ஜனாதிபதி அலுவலகத்தில் புதன்கிழமை (17) நடைபெற்றது.

கிராமங்கள், நகரங்கள் மற்றும் பெருந்தோட்டங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய மக்களுக்கு நிரந்தர காணி மற்றும் வீட்டு உரிமைகளை வழங்குவதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு எனவும் அதற்குத் தேவையான புரட்சிகர வேலைத்திட்டம் ஏற்கனவே செயற்படுத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதன்போது தெரிவித்தார்.

அரச பெருந்தோட்டக் கம்பனி மற்றும் உள்ளூர் பெருந்தோட்டக் கம்பனிகளின் கட்டுப்பாட்டில் உள்ள தோட்ட மக்கள் வாழும் பகுதிகளை புதிய கிராமங்களாக சட்டரீதியாக பிரகடனப்படுத்தத் தேவையான சட்ட ஏற்பாடுகளை மேற்கொள்வது மிகவும் முக்கியமான மற்றும் காலத்திற்கு உகந்த

முன்மொழிவு என்பதால், அனைத்துத் தரப்பினரின் கொள்கை ரீதியான உடன்பாடு வெளிப்படுத்தப்பட்டது. இந்த பிரேரணையை நடைமுறைப்படுத்தும் போது தற்போது மலையகத்தில் வாழும் அனைத்து மக்களினதும் காணி உரிமையை உறுதிப்படுத்துவது இன்றியமையாதது என சுட்டிக்காட்டிய பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன், இது தொடர்பான பிரேரணையை ஜனாதிபதியிடம் கையளித்தார்.

கிராமங்கள், நகரங்கள் மற்றும் பெருந்தோட்டங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய மக்களுக்கு நிரந்தர காணி மற்றும் வீட்டு உரிமைகளை வழங்குவதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு எனவும் அதற்குத் தேவையான புரட்சிகர வேலைத்திட்டம் ஏற்கனவே செயற்படுத்தப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இங்கு குறிப்பிட்டார்.

உள்ளூர் பெருந்தோட்டக் கம்பனிகளுடன் கலந்தாலோசித்து அவர்களின் கருத்துக்களைப் பெற்று அதற்கான சட்டச் செயற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் தோட்ட மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அனைத்துக் கட்சிகள் அடங்கிய குழுவொன்றை நியமிக்குமாறும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஆலோசனை வழங்கினார்.

நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சர் ஜீவன் தொண்டமான், கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்த் குமார், பாராளுமன்ற உறுப்பினர்களான மனோ கணேசன், பழனி திகம்பரன், வடிவேல் சுரேஸ், வேலு குமார், எம்.ராமேஸ்வரன் மற்றும் எம். உதயகுமார் ஆகியோரும் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சின் செயலாளர் ஏ.சி. எம்.நபீல், அரச பெருந்தோட்ட மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் கலாநிதி சுகத் யாலேகம உள்ளிட்ட அரச அதிகாரிகள் குழு இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றனர்.

# சஜித் அணியில் மூவருக்கு சிக்கல்

கட்சி மற்றும் கட்சித் தலைமைத்துவம் மீதான இவர்களின் விமர்சனங்கள் காரணமாக, இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகக் கட்சி வட்டாரங்கள் மூலம் தெரியவந்துள்ளது.

கட்சியையும் கட்சித் தலைமையையும் இவர்கள் விமர்சித்ததாகக் கூறப்படுகிறது. இதனாலேயே இம்மூவரையும் பதவி நீக்கம் செய்ய வேண்டுமென அக்கட்சியிலுள்ள பலர் கட்சித் தலைமையிடம் கோரிக்கை முன்வைத்திருந்தனர்.

இதேவேளை. ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் தலைவரைப் பதவியில் இருந்து சரத் பொன்சேகாவை நீக்கி விட்டு கட்சியின் மற்றுமொரு சிரேஷ்ட உறுப்பினருக்கு அந்த பதவியை வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான இறுதி முடிவு எதிர்வரும் செயற்குழு கூட்டத்தில் எடுக்கப்படவுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேக்கா அண்மையில் பாராளுமன்றத்தில் கட்சித் தலைமையை விமர்சித்து உரை நிகழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# தமிழக மீனவர்களை தமிழகம் கொண்டுவரும்

இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்கள் 26 பேரை விடுவிக்க நடவடிக்கை எடுக்க மத்திய அரசுக்கு உத்தரவிடக்கோரி இராமநாதபுரம் மாவட்டம் மோர்ப்பண்ணையைச் சேர்ந்த தீரன் முருகன் உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

அந்த மனுவில், "இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் சிறைபிடிக்கப்படுவது, படகுகள் பறிமுதல் செய்யப்படும் சம்பவங்கள் 34 ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்று வருகிறது. வாழ்வாதாரத்துக்காக மீன்பிடி தொழில் செய்து வரும் தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் குற்றவாளிகள் போல கைது செய்கின்றனர். எனவே, 26 மீனவர்களை விடுவிக்க உரிய நடவடிக்கை எடுக்க மத்திய அரசுக்கு உத்தரவிட வேண்டும்" எனக் கோரியிருந்தார்.

இந்த மனு நீதிபதிகள் ஆர். சுரேஷ்குமார், ஜி.அருள்முருகன் அமர்வில் வியாழக்கிழமை (18) விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள், "தமிழக மீனவர்களும், இந்தியக் குடிமக்களே. அவர்களின் பாதுகாப்பு என்பது முக்கியமானது" என்றனர். மத்திய அரசு தரப்பில், "தமிழக மீனவர்களை மீட்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது" என தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து நீதிபதிகள், "இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட தமிழக மீனவர்களைத் தமிழகம் கொண்டு வரத் தேவையான நடவடிக்கைகளை மத்திய அரசு எடுக்கும் என இந்த நீதிமன்றம் நம்புகிறது. வழக்கு முடிக்கப்படுகிறது" என உத்தரவிட்டனர்.

# 'பிரெஸ்டீஜ் பால்கன்' இல் இருந்து ஒன்பது பேர் மீட்பு

இந்தியக் கடற்படைக்குச் சொந்தமான INS டெக் யுத்த கப்பல் மூலம் இவர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

காணாமல் போனோரை மீட்பதற்காக இந்தியக் கடற்படையின் P 81 ரக விமானமும் பயன்படுத்தப்பட்டிருந்தது.

ஓமான் கடற்பிராந்தியத்தில் எண்ணெய் தாங்கிக் கப்பலொன்று மூழ்கி விபத்துக்கு உள்ளானதில் இலங்கையர்கள் மூவர் உள்ளிட்ட 16 பேர் காணாமல் போயிருந்தனர்.

கொமொரஸ் நாட்டுக் கொடியுடன் பயணித்த குறித்த கப்பல், யேமன் துறைமுகமான ஏடனிலிருந்து ஓமானின் முக்கிய தொழில்துறை துறைமுகமான டுக்மில் பகுதியில் வைத்துக் கவிழ்ந்ததாக சர்வதேச செய்திகள் தெரிவித்திருந்தன.

ஓமான் கடல்சார் தேடல் மற்றும் மீட்பு ஒருங்கிணைப்பு மையத்துடன் தொடர்பு கொண்டு காணாமல் போன 3 இலங்கையர்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வதாகக் கடற்படை பேச்சாளர் கெப்டன் கயான் விக்ரமசூரிய தெரிவித்துள்ளார்.





## ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலய கொடியேற்றம்...

வி.ரி.சகாதேவராஜா

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருக்கோவில் ஸ்ரீ சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்தின் வருடாந்த ஆடி அமாவாசை உற்சவ திருக்கொடியேற்ற நிகழ்வு வியாழக்கிழமை (18) சிறப்பாக நடைபெற்றது.

ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ சண்முகமகேஸ்வரக் குருக்கள் முன்னிலையில், ஆலயகுரு சிவஸ்ரீ அங்குசநாதக்குருக்கள் ஒத்துழைப்பில் கொடியேற்ற உற்சவம் 12.52 மணியளவில் சிறப்பாக நடைபெற்றது.







ரணிலின் வெற்றி

# “சாதனை படைக்கும்”

ஐக்கிய தேசியக் கட்சி தலைவரான ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதித் தேர்தலில் தேசிய பொது வேட்பாளராகக் களமிறங்கி, மக்களின் அமோக ஆதரவுடன் வரலாற்று ரீதியிலான வெற்றியைப் பதிவு செய்வது உறுதியாகியுள்ளது என்று ஜனாதிபதியின் கீழ் இயங்கும் தொழிற்சங்க முடிவுகளை எடுக்கும் மூன்றுபேர் கொண்ட குழுவின் உறுப்பினரும், ஐக்கிய தேசியக் கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளருமான சுப்பையா ஆனந்தகுமார் தெரிவித்துள்ளார்.

மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு 1,700 ரூபாய் சம்பளத்தைப் பெற்றுக் கொடுப்பதில் எமது கட்சி உறுதியாகவுள்ளது எனவும் சம்பள உயர்வை வழங்க மறுக்கும் நிறுவனங்களின் குத்தகை ஒப்பந்தம் நிச்சயம் இரத்து செய்யப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

அண்மையில் ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன, பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார ஆகியோருடன் சுப்பையா ஆனந்தகுமாரும், தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களைச் சந்திப்பதற்குச் சென்றிருந்தார்.

இச்சந்திப்பின் பிறகு ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட சுப்பையா ஆனந்தகுமார்,

“அரசமைப்பின் பிரகாரம் உரிய காலப்பகுதியில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதில் ஜனாதிபதி உறுதியாக இருக்கின்றார். அந்தவகையில், தேர்தல் ஏற்பாடுகள் பற்றி ஆராய்வதற்கு வந்திருந்தோம். தேர்தலை நடத்துவதற்கான முதல் சந்தர்ப்பத்திலேயே தேர்தல் திகதியை நிர்ணயிக்குமாறு கோரிக்கை விடுத்தோம். நீதியானதும், சுதந்திரமானதுமான தேர்தலுக்கு எமது கட்சி முழுமையான ஆதரவை வழங்கும். ஏனெனில், அன்று முதல் இன்றுவரை ஜனநாயக வழியிலேயே அரசியல் பயணம் தொடர்கின்றது.

பொருளாதார போரிலிருந்து நாட்டை மீட்டெடுத்துள்ள உலகத் தலைவர்களுள் ஒருவராக போற்றப்படும் எமது ஜனாதிபதிக்கு நாளுக்கு நாள் மக்கள் ஆதரவு பெருகி வருகின்றது. அவரின் வெற்றி உறுதியாகியுள்ள நிலையில், இம்முறை வரலாற்று சாதனை படைக்கும் அளவுக்கு வாக்குகள் கிடைக்கப்பெறும் என்பது உறுதி. அனைத்து இன மக்களும் ஒன்றிணைந்து இலங்கையர்களாக, நாட்டுக்காக, நாட்டின் காவலனுக்கு வாக்களிக்கவுள்ளனர்.

அதேவேளை, மலையக மக்களைத் தேசிய நீரோட்டத்தில் இணைக்கும் விடயத்தில் ஜனாதிபதி அதிக அக்கறையுடன் செயற்பட்டுவருகின்றார். அந்தவகையிலேயே மலையக தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்து பேச்சு நடத்தி இருந்தார். தோட்ட தொழிலாளர்களின் சம்பள பிரச்சினைக்கு நிச்சயம் தீர்வு கிட்டும். அவ்வாறு இல்லையேல் குத்தகை ஒப்பந்தம் இரத்து செய்யப்படும். இது தொடர்பில் பெருந்த தோட்ட நிறுவனங்க ளுக்குத் தெளிவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது.



கிராமங்களுக்கு கிட்டும் அனைத்து அரச சேவைகளும், சலுகைகளும் பெருந்தோட்ட பகுதிகளுக்கும் பெற்று கொடுக்கும் நோக்கிலேயே பெருந்தோட்ட குடியிருப்பு பகுதியையும் கிராமங்களாக பிரகடனப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு மலையக நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவு வழங்க வேண்டும்.

அத்துடன், மக்களின் பிரச்சினைகளைக் கேட்டறியவும், உரிய தீர்வு திட்ட பொறிமுறையை வகுக்கவும் கட்சி செயலாளர் பாலித ரங்கே பண்டாரவின் வழிகாட்டலுடன் எனது தலைமையில் தொடர்பாடல் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது. எனவே, மக்கள் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளையும், தமது கோரிக்கைகளையும் முன்வைக்கலாம்” என்றார்.

நண்பியை நம்பிய நண்பி

# தன்னுயிரை மாய்த்தார்

எம்.றொசாந்த்

தனது நண்பிக்காக வங்கியிலிருந்து கடனாகப் பெற்றுக்கொடுத்த பணத்தினை மீளச் செலுத்த முடியாதமையால் மனமுடைந்த குடும்ப பெண் ஒருவர் தவறான முடிவெடுத்து தன்னுயிரை மாய்த்து கொண்டுள்ள சம்பவம் ஒன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணம்- அல்வாய் பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தாயொருவரே இவ்வாறு தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார்.

தனது நண்பி பணக் கஷ்டத்திலிருந்தபோது, வங்கியில் பெருந்தொகை பணத்தினை கடனாகப் பெற்று, தனது நண்பிக்கு பண உதவி செய்துள்ளார்.

பண உதவியை பெற்றுக்கொண்ட நண்பி, பணத்தினை மீள செலுத்தாத நிலையில், வங்கியில் கடன் பெற்ற பெண், பண நெருக்கடிக்கு ஆளாகி, மனவுளைச்சலில் காணப்பட்டுள்ளார்.

இந்நிலையில், முகநூலில் நண்பியின் பெயரையும், தனது மரணத்திற்கு காரணம் இவர் தான் என்றும் இவரால் தான் தனது மூன்று பிள்ளைகளையும் அநாதையாக விட்டு செல்வதாகவும் பதிவிட்டு தன்னுயிரை மாய்த்துக்கொண்டுள்ளார்.

# கிழக்கு ஆளுநரால் நிரந்தர நியமனங்கள்



கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களில் 10 வருடங்களுக்கு மேலாகத் தற்காலிக நியமனத்தில் பணிபுரிந்து வரும் ஊழியர்கள் தமது நிரந்தர நியமனங்கள் குறித்து கடந்த கால ஆளுநர்கள், முதலமைச்சர்கள் என பல்வேறு தரப்பினர்களிடம் கடந்த காலத்தில் கோரிக்கைகளை முன்வைத்து வந்தனர். அவர்களால் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாத நிலையில், கடந்த வருடம் சம்பந்தப்பட்ட ஊழியர்கள் தங்களது நியமனம் குறித்தும், நிரந்தர நியமனம் இல்லாததால் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் கவனத்திற்குக் கொண்டு வந்தனர்.

இவ்விடயம் தொடர்பில் ஆளுநர் செந்தில் தொண்டமான், ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு சென்று ஒரு வருடத்தில் உரிய தீர்வினைப் பெற்று தருவதாக உறுதியளித்திருந்தார்.

அதற்கமைய கிழக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களில் தற்காலிக நியமனத்தில் பணிப்புரியும் ஊழியர்களின் பிரச்சினை குறித்து ஜனாதிபதி, பிரதமருடன் கலந்துரையாடி, அதற்கான உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு 1,350க்கும் மேற்பட்ட ஊழியர்களுக்கு ஆளுநர் செந்தில் தொண்டமானால் நிரந்தர நியமனங்கள் வழங்கி வைக்கப்பட்டது.



மக்களின் பிரச்சினைகளை கேட்டறிந்து அதற்கு தேவையான உரிய நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொண்டுவரும் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் 9 மாகாணங்களுக்கும் முன்னுதாரணமாக செயற்படுவதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

மேலும் கிழக்கு மாகாணத்தில் காணப்படும் பிரச்சினைகளை இனங்கண்டு அதற்கு உரிய தீர்வினை உடனடியாக பெற்றுக் கொடுத்தமைக்காக கிழக்கு மாகாணத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினார்கள் ஆளுநர் செந்தில் தொண்டைமானுக்கு பாராட்டுக்களை தெரிவித்ததோடு, 10 வருடமாக காணப்பட்ட தங்களது பிரச்சினைக்கு நிரந்தர தீர்வினை ஒரு வருடக் காலத்திற்குள் பெற்றுத்தந்த ஆளுநருக்கு உள்ளூராட்சி மன்ற ஊழியர்கள் தமது நன்றிகளை தெரிவித்துள்ளனர்.

“40 ஆண்டுகளுக்கு முன் கல்வி சீர்திருத்தங்களை

# எதிர்த்து போராடியதன் பலனை இன்று அனுபவிக்கின்றோம்”

40 வருடங்களுக்கு முன்னர் கொண்டுவரப்பட்ட கல்விச் சீர்திருத்தங்களுக்கு இணங்காததன் விளைவை இன்று நாம் அனுபவித்துக் கொண்டிருக்கின்றோம் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் “ஜனாதிபதி புலமைப்பரிசில் வேலைத்திட்டத்தின்” கீழ் கம்பஹா மாவட்டத்தின் மினுவாங்கொடை கல்வி வலய சிறுவர்களுக்கான புலமைப்பரிசில்கள் வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு அமைச்சர் இதனை தெரிவித்தார். இந்நிகழ்வு வியாழக்கிழமை (18) கம்பஹா நைவல ஜயசிங்க சிட்டி சென்டர் மண்டபத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கருத்து தெரிவித்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க,

“ கடந்த காலத்தில் இந்த நாட்டில் பொருளாதார நெருக்கடி மிகவும் தீவிரமாக இருந்தது என்பதை நாங்கள் அறிவோம். அப்படியிருந்தும் ஜனாதிபதியின் கவனம் இந்த நாட்டின் நலனுக்காகவும் பிள்ளைகளுக்காகவும் குவிக்கப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தைப் பொறுப்பேற்கும் பிள்ளைகளின் குடும்பங்களுக்குப் பொருளாதார பலம் தேவைப்படுபவர்களை இனங்கண்டு பிள்ளைகளுக்கு இந்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதற்கான தெரிவை எமது மாகாண அலுவலக அதிகாரிகள், அதிபர்களே மேற்கொண்டுள்ளனர்.

யாருடைய அரசியல் தலையீடும் இல்லை. இந்த திட்டங்கள் குழந்தைகளின் தேவைக்காகச் செயல்படுத்தப்படுகின்றன. 40 வருடங்களுக்கு முன்னர் கல்வியைச் சீர்திருத்த அப்போதைய ஜனாதிபதி முயற்சித்துள்ளார். அப்போது அது விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது, சில குழுக்கள் அதற்கு எதிராகப் போராடி, எதிர்ப்புத் தெரிவித்ததோடு, அந்தச் சீர்திருத்தத்தை இலங்கையில் நடைமுறைப்படுத்த அனுமதிக்கவில்லை. 40 வருடங்களின் பின்னர் இலங்கையில் அந்த கல்வி சீர்திருத்தங்களுக்கு புதிய முகம் கொடுத்து அன்று எதிர்த்த குழு இன்று அதனை ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு வந்துள்ளது. அதற்குக் காரணம், 40 வருடங்களுக்கு முன்னர் எமது பிள்ளைகளுக்காக ஆரம்பிக்கப்பட்ட கல்விச் சீர்திருத்த வேலைத் திட்டத்தை எதிர்காலத்தை காணும் தலைவர் என்ற வகையில், ஜனாதிபதி முன்னெடுத்திருந்தால் நாமும் இந்த நாடும் இன்று உலகில் ஒரு மேம்பட்ட கல்வித்துறை உள்ள நாடுகளின் மட்டத்தில் இடம்பிடித்திருக்கும். நாங்கள் 40 ஆண்டுகள் தாமதமாகி விட்டோம். இதற்கு யார் பொறுப்பேற்க வேண்டும்? பொறுப்பை ஏற்றிருக்க வேண்டியவர்கள் பின்னர் நாட்டிற்கு வந்து சர்வதேச மட்டத்திற்குச் சென்று இந்த வேலைத்திட்டத்தின் பகுதிகளை எடுத்து அவற்றை நடைமுறைப்படுத்த உழைத்தனர். அந்த 40 ஆண்டுகளில் நாம் அடைந்த இழப்பைப் புதுப்பிக்க வேண்டுமானால் இந்த கல்வி சீர்திருத்தங்களில் சேர வேண்டும். பொது நிலை மற்றும் உயர்தரம் கற்பிக்கும் ஆசிரியர்களைக் கொண்டு வந்து நாட்டின் எதிர்காலத்தை உலகிற்கு எடுத்துச் செல்லும் வேலைத்திட்டத்தை எமது பிரதேசங்களில் உருவாக்க வேண்டும் என தெரிவித்துள்ளார்.



ஜனாதிபதித் தேர்தல்:

# அரச அச்சகம் வெளியிட்ட தகவல்

ஜனாதிபதி தேர்தலுக்கான அச்சிடும் பணிகளின் பாதுகாப்பிற்காக நாளாந்தம் 65 பொலிஸ் உத்தியோகத்தர்கள் தேவைப்படுவதாக அரச அச்சகம் தெரிவித்துள்ளது.

வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து, வாக்குச் சீட்டு அச்சிடும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் சந்தர்ப்பம் முதல் பொலிஸ் பாதுகாப்பு தேவைப்படுவதாக அரச அச்சகர் கங்கா கல்பனி லியனகே வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு தெரியப்படுத்தியுள்ளதாக அவர் கூறினார்.

தேர்தல்கள் ஆணைக்குழு ஊடாக பொலிஸாருக்கு தெளிவுபடுத்தியுள்ளதுடன், தேவையான பாதுகாப்பைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுவதாக அரச அச்சகர் தெரிவித்துள்ளார்.

# ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோற்று பருக்கையே பதமானது

கற்பித்தல் மூலம் மாணவர்களுக்கு அறிவு திறன் அல்லது நல்லொழுக்கத்தைப் பெற உதவுபவர் ஆசிரியர். பாடசாலை பருவத்தில் 13 வருடங்கள் பட்டைத்தீட்டி, சமூகத்தில் ஒவ்வொருவரையும் ஓர் உயரிய அந்தஸ்துக்குக் கொண்டு வருவதில் தன்னுடைய வாழ்நாளில் அரைவாசிக்கு மேல் செலவழித்து விடுவார்கள்.

ஆசிரியர்களின் சொல் பேச்சைக் கேட்டு நல்லொழுக்கத்துடன் நடக்காதவர்கள், உயரிய அந்தஸ்துக்குச் செல்லமாட்டார்கள். எனினும், தனிப்பட்ட திறமையால் தங்களை உயர்த்திக் கொண்டவர்களும் இருக்கத்தான் செய்கின்றனர். இவற்றுக்கெல்லாம் பிரதான வகிபாகமாக அமைபவர் ஆசிரியர்.

அதனால்தான் என்னவோ, மாதா, பிதாவுக்கு பின்னர் குரு தெய்வம் என்பார்கள் போலும். அதனை மறந்தே பலரும் செயற்படுகின்றனர் என்பது கவலையான விடயமாகும்.

தங்களை வருத்தி கற்பிக்கும் ஆசிரியர்கள் சமூகத்தில் இருக்கும் போது, ஒருசிலர் எதிர்மறையான செயற்பாடுகளிலேயே ஈடுபடுகின்றனர். இது ஆசிரியர் சமூகத்தில் மட்டுமன்றி ஏனைய சமூகத்திலும் இருக்கத்தான் செய்கின்றன. ஒருசிலரின் செயற்பாடுகள் முழு சமூகத்தையும் தலைகுனிய வைத்துவிடுகின்றன.

சம்பள உயர்வை வலியுறுத்தி சுகயீன விடுமுறை போராட்டத்தில் ஈடுபட்டிருந்த அதிபர், ஆசிரியர்கள், எதிர்வரும் நாட்களில் சட்டப்படி வேலை போராட்டத்தில் ஈடுபடுவதாக அறிவித்துள்ளனர். தற்போதைய பொருளாதார நெருக்கடியை அடிப்படையாகக் கொண்டு பார்ப்போமெனில், அதிபர், ஆசிரியர்களின் சம்பளம், கொடுப்பனவுகளை அதிகரிக்கவே வேண்டும்.

வாழ்க்கையைக் கடனின்றி கொண்டு நடத்துவதற்கான சம்பளம் கிடைக்குமாயின், எவருமே மாற்றுத்தொழிலை, பகுதிநேர தொழிலை நாடமாட்டார்கள். ஆசிரியர்களில் பெரும்பாலானவர்கள், பிரத்தியேக வகுப்புகளை நடத்துகின்றனர்.

பாடசாலைகளில் கற்பிப்பதை விடவும், பிரத்தியேக வகுப்புகளுக்குக் கூடுதலான முன்னுரிமையைக் கொடுக்கின்றனர். அதில் பெருமளவில் இலாபத்தை ஈட்டியும் கொள்கின்றனர். என்னதான் பாடசாலைக்குச் சென்றாலும் தங்களுடைய பிள்ளைகள், பிரத்தியேக வகுப்புகளுக்குச் சென்றால்தான் சித்தியடைவார்கள் என ஒருசில பெற்றோர்களும் நினைக்கின்றனர்.

அவ்வாறு நினைப்பதில் எவ்விதமான சந்தேகமும் இல்லை. ஏனெனில், கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப்பரீட்சைக்குத் தோற்றிய கீழ்நிலை வகுப்புகளைச் சேர்ந்தவர்கள் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர். அவர்களில் பெரும்பாலான மாணவர்கள், பிரத்தியேக வகுப்புகளுக்குச் சென்றே சித்தியடைந்துள்ளனர். இதேவேளை, பாடசாலைகளில் மட்டுமே கற்று, சித்தியடைந்த மாணவர்களும் உள்ளனர்.

இந்நிலையில்தான், பாடசாலைக்குச் சென்று, வரவேற்றில் பதிவை இட்டுவிட்டு, தனியார். வகுப்புகளை நடத்திய ஆசிரியர் ஒருவர் இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார். அத்துடன், வடமேல் மாகாணத்தில் கற்பிக்கும் ஏனைய ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் மற்றும் அதிபர்களுக்குத் தனியார் வகுப்புகள், கருத்தரங்குகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

வீட்டுப்பாடங்களைச் செய்யத் தவறிய மாணவர்களை, சோற்றை திண்கிறாயா? அல்லது வேறு எதையாவது திண்கிறாயா? என ஆசிரியர்கள் திட்டுவார்கள். அந்த சோறு வேகும். பானையில் சோறு வெந்துவிட்டதா என்று பார்ப்பதற்கு ஒரு சோற்றை எடுத்துப் பார்த்தாலே போதும். ஒரேயொரு சொல் அல்லது செயல் ஒருவரின் முழு குணத்தைக் காட்டப் போதுமானதாக அமைந்துவிடலாம். அதுபோலதான், இந்த ஆசிரியரின் செயல், முழு ஆசிரியர் சமூகத்தையும் தலைகுனியச் செய்துவிட்டது.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

இருவர் தங்களுக்குள் பேசியபடி சென்றார்கள். அவர்களில் ஒருவர், ஊரில் யாரோ இளைஞர்கள் சண்டை செய்ததாகச் சொன்னார். எங்கு நடந்தது என்பது பற்றிப் பேசாமல் சென்று கொண்டிருந்தனர்.

இதைக் கேட்ட வீதியின் அருகே நின்றிருந்தவர், “என்ன எங்கள் ஊரில் சண்டையா” என கேட்டு விட்டு, உடனே ஊருக்குள் சென்று, தனது கற்பனைகளையும் சேர்த்து, வாய், மூக்கு, வால் என்பவற்றைச் சேர்த்து, அங்குள்ள ஒருவருக்குச் சொல்ல, அவரும் அதற்கு மேலும் பல கதைகளைச் சோடித்துச் சொல்ல, ஊர்ச் சனங்களும் ஆவேசத்துடன் ஆயுதங்களை எடுத்துக்கொண்டு, அவர்களைத் தேடிச் சென்றார்கள்.

ஊரே பரபரப்படைந்தது. முடிவில் அங்கு ஒன்றுமே நடக்கவில்லை என்பதை அறிந்து, “யாரடா இதைச் சொன்னது” என கேட்க, கதையைக் கட்டியவர்கள் ஒளித்துத் தப்பித்து விட்டார்கள்.

தத்தமது காரியங்களைச் செய்தால், வீணான சிந்தனைகள் புறப்படாது. கலவரங்கள் எல்லாமே வதந்திகளால்த் தான் உருவாகின்றன. யுத்தங்கள் கூட!

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### வடிகான்களை புனரமையுங்கள்

திருகோணமலை நகர்ப்பகுதியில் அமைந்துள்ள உவர்மலை மக்கேஸ் சர்வீதியிலுள்ள வடிகான்கள் முற்றும் முழுதாக செயல்படாத நிலையில் காணப்படுகின்றன. இப்பகுதியில் உள்ள வடிகான்களில் காட்டுத் தாவரங்கள் வளர்ந்து, குப்பைக்கழிவுகளால் அடைக்கப்பட்டுள்ளது.

குறித்த வடிகானில் கழிவு நீர் தேங்கியிருப்பதால் துர்நாற்றம் வீசுவதுடன் மழைக்காலங்களில் டெங்கு நோய் பரவும் அபாயம் உள்ளது.

வடிகான்கள் சுப்ராலகுன் பூங்காவிற்கு எதிர் பக்கத்தில் அமைந்துள்ளமையால் பூங்காவிற்கு வருகின்ற மக்களுக்கு இது பெரும் அசௌகரியமாகவுள்ளது.

வடிகான்களில் நீர்த்தேங்கா வண்ணம் புனரமைத்துத் தருமாறு பிரதேச மக்கள் திருகோணமலை நகரசபையினரிடம் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது,

- ச.தனுஷ்கா





தெ.ஞாலசீர்த்தி மீநிலங்கோ

போரின் முடிவின் 15 ஆண்டுகளின் பின் – 9

# அதிகாரம் குறித்த குறிப்புகள் - 2

போர் முடிவடைந்தவுடன், மே 2009க்கு முன்னர் அரசியல் வாழ்வில் இருந்த அச்சம், அச்சுறுத்தல் மற்றும் பழிவாங்கும் சூழ்நிலையில் தளர்வு ஏற்பட்டுள்ளது. இருப்பினும், இராணுவ மயமாக்கலைக் குறைத்து சிவில் நிர்வாக ஆட்சிமுறைக்கு மீள்வதென்பது ஆளும் கட்சி அல்லது எதிர்க்கட்சியின் உடனடி நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதியாக இருக்கவில்லை.

விதியின் ஓர் அசாதாரண திருப்பமாக, ஜனவரி 2010இல் திட்டமிடப்பட்ட ஜனாதிபதித் தேர்தலுக்கான எதிர்க்கட்சியின் வேட்பாளர், கடந்த மூன்று ஆண்டுகளாகக் கிளர்ச்சிக்கு எதிரான போரை உண்மையில் வழிநடத்திய இலங்கை இராணுவத்தின் முன்னாள் தளபதி ஆக இருந்தார்.

இலங்கையின் இன உள்நாட்டுப் போரின் அரசியல் செலவு-பயன் பகுப்பாய்வில், இறுதியில் இழப்பவர்கள் இலங்கைத் தமிழர்கள். ‘தேசிய சுயநிர்ணயம்’ என புரிந்து கொள்ளப்பட்ட ஆயுதப் போராட்டத்தின் முப்பது வருடங்களின் பின்னர், அவர்களுக்குக் கிடைத்ததெல்லாம் முட்கம்பிகளால் சூழப்பட்ட திறந்த சிறை முகாம்களுக்குள் இடம்பெயர்ந்தவர்களின் அந்தஸ்துதான்.

இலங்கையில் இனங்களுக்கிடையிலான சமத்துவம், நீதி மற்றும் நம்பிக்கை ஆகியவற்றின் மதிப்புகளை அரசியல் விவாதம் மற்றும் கலாசாரத்தில் மீண்டும் அறிமுகப்படுத்துவதற்கு பாரிய முயற்சி தேவைப்படும். போர் முடிந்து 15 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையிலும் அது சாத்தியமாகவில்லை என்பது வருத்தத்திற்குரிய உண்மை.

விடுதலைப் புலிகள் அரசுடனான இராணுவ மோதலின் விளைவுகளால், பல தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் சிங்கள அரசியல் தலைமைகளுடன் கூட்டு ஒத்துழைக்கும் அரசியலை தங்களுக்குக் கிடைக்கக்கூடிய மிகவும் விவேகமான விருப்பமாக ஏற்றுக்கொண்டுள்ளனர்.

சிங்கள மற்றும் தமிழ் தேசியவாத திட்டங்களோடு அரசியலின் தீவிர துருவ முனைப்பு இலங்கையில் எந்தவொரு குறிப்பிடத்தக்க அரசியல் சீர்திருத்தத்தையும் தடுக்கும் என்ற உண்மையை அவர்கள் நன்கு அறிவார்கள்.

எனவே, சமத்துவம் மற்றும் பிராந்திய சுயாட்சியின் அடிப்படையிலான சிறுபான்மை உரிமைகளுக்கான வேட்கை புலிகள் அல்லாத தமிழ் கட்சிகளின் அரசியலிலும், மலையக, தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களின் அரசியல் கட்சிகளிலும் இப்போது இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

கட்சித் தலைவர்களுக்கு இலாபகரமான அமைச்சரவை பதவிகளைப் பெறுதல் மற்றும் பிராந்திய பொருளாதார மேம்பாடு போன்ற வடிவங்களில் மத்திய அரசாங்கத்தில் அதிகாரப் பகிர்வுக்கு முக்கியத்துவத்தை வேண்டிநிற்கும் நிலையே இன்று உள்ளது.

வன்முறையான உள்நாட்டுப் போரின் முடிவும், விடுதலைப் புலிகளின் வியத்தகு அழிவும் இலங்கையில் குறிப்பிடத்தக்க அரசியல் சமநிலையற்ற நிலையை உருவாக்கியுள்ளது.

விடுதலைப் புலிகளின் அழிவுடன், தேசிய அளவிலான மோதலில்தான் அதிகார மாற்றம் உடனடியாகக் காணக்கூடியதாக உள்ளது. 1980களின் நடுப்பகுதியிலிருந்து கூட, தமிழ்ப் போராளிகள் கணக்கிடுவதற்கு ஒரு வலுவான சக்தியாக இருந்தனர்.

இதன் பொருள், தமிழர் கோரிக்கையை தேசிய மற்றும் சர்வதேச நிகழ்ச்சி நிரலில் கட்டாயப்படுத்தக்கூடிய குரல் எழுப்பும் மற்றும் இராணுவ ரீதியாக வலிமையான வெற்றியாளர்களைக் கொண்டிருந்தது. எவ்வாறாயினும், அவர்களின் வன்முறை நடத்தை இலங்கை அரசின் எதிர் வன்முறையைத் தூண்டியது மற்றும் அவர்களின் கோரிக்கைகளுக்கு அடிபணியத் தயங்கியது.

ஆயினும் கூட, 1990களின் நடுப்பகுதியில் இலங்கை அரசாங்கத்துடனான சமாதான பேச்சுவார்த்தைகளிலும் 2002இல் நோர்வேயின் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட்ட பேச்சுவார்த்தைகளிலும் விடுதலைப் புலிகளுக்கு முதன்மையான இடம் கிடைத்தது. அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான ‘சமநிலை’ முக்கியமானது.

2002இல் புலிகள் சமாதான முன்னெடுப்பில் இணைந்தனர். அரசாங்கம் பொருளாதாரப் பிரச்சினைகளால் பாதிக்கப்பட்டிருந்த நேரத்தில் புலிகளின் இராணுவ முட்டுக்கட்டையும் ஒப்பீட்டளவில் வலுவான நிலையும், பெப்ரவரி 2002 போர்நிறுத்த உடன்படிக்கைக்கு வழிவகுத்தது, இது புலிகளின் பிரதேசத்தின் மீதான கட்டுப்பாட்டை அங்கீகரித்து அவர்களின் சட்டப்பூர்வமானது தமிழ் மக்களின் பிரதிநிதி என்ற பாத்திரத்தை வழங்கியது.

நோர்வேயினால் வசதிப்படுத்தப்பட்ட எளிமைப்படுத்தப்பட்ட சமாதான முன்னெடுப்புகளின் முறிவு, அதிகார உறவுகளில் ஏற்பட்ட மாற்றங்களால் வேறு திசைகளிற்கு நகர்ந்தது. விடுதலைப் புலிகளுக்குள் ஏற்பட்ட பிளவு, அதன் கிழக்குத் தளபதி கேணல் கருணா இயக்கத்திலிருந்து வெளியேறி, பின்னர் அரசாங்கத்தில் இணைந்தார்.

கருணாவுக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்த இந்த சமாதான பேச்சுக்கள் வழிவகுத்திருக்கலாம். கிழக்கில் விடுதலைப் புலிகள் முக்கியமான இராணுவ பலத்தை இழந்ததுடன், பேச்சுவார்த்தை முறிவுக்கும், போர்நிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வருவதற்கும் விடுதலைப் புலிகளே காரணம் என்ற சர்வதேசத்தின் கண்ணோட்டம் இலங்கை அரச படைகளின் இராணுவ முன்னேற்றங்களுக்குக் களத்தைத் தயார் செய்தது. படிப்படியாகப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தை மீளப் பெற்ற அரசாங்கம் இறுதியாகப் புலிகளின் தலைவரைக் கொன்று போரில் வெற்றி பெற்றதாக அறிவித்தது. தமிழீழ விடுதலைப் புலிகளின் தோல்வியானது அதிகாரப் பகிர்வு மற்றும் அரசியலமைப்பு சீர்திருத்தங்களுக்கான தமிழர் கோரிக்கைகளை நிகழ்ச்சி நிரலில் கீழே தள்ளியுள்ளது, ஏனெனில், தமிழர்களுக்கு வலுவான மற்றும் நம்பகமான பிரதிநிதிகள் இல்லை.

போருக்குப் பின்னர் அரசியல் ரீதியாக மேலாதிக்கப் பேச்சு இலங்கை என்பது பல கலாசார சமூகமாக இருந்தது, ஆனால் எண்ணிக்கையில் பெரும்பான்மையாக உள்ள சிங்களவர்கள் இயல்பாகவே ஆதிக்கம் செலுத்துகிறார்கள். எந்தவொரு வலுவான அரங்காடிகளாலும் இந்த உரையாடலைத் தீவிரமாகச் சவால் செய்ய முடியவில்லை.

எவ்வாறாயினும், இலங்கையில் விடுதலைப் புலிகள் காட்சியிலிருந்து வெளியேறிய நிலையில், சிங்களவர்கள் ஆதிக்கம் செலுத்தும் அரசுக்கு எதிரான எதிர்ப்புக்கள் புலம்பெயர்ந்த தமிழ் மக்களிடமிருந்து வந்துள்ளன - இதற்கு முன்னர் புலிகளுக்கு பெரும் நிதியளித்தவர்கள்.

புலம்பெயர் அமைப்புக்கள் தமிழீழ விடுதலைக்கான போராட்டத்தைத் தொடரப் போவதாக உறுதியளித்தன, ஆனால் விடுதலைப் புலிகள் அனைத்தையும் ஆதிக்கம் செலுத்தும் மற்றும் ஒன்றிணைக்கும் சக்தியாக இல்லாததால், புலம்பெயர் நாடுகளில் அதிகாரத்திற்கான போராட்டம் தொடங்கியது.

சுவாரஸ்யமாக, பகிரப்பட்ட எதிரியாக விடுதலைப் புலிகளுக்கு எதிராகத் திரட்டப்பட்ட போரின் வெற்றிப் பக்கத்தின் ஒற்றுமை நீண்ட காலம் நீடிக்கவில்லை. ஜனாதிபதி ராஜபக்ஷவிற்கும் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவிற்கும் இடையிலான பிளவு, 2010 ஜனவரி ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சி வேட்பாளராகப் போட்டியிடுவதற்குக் காரணமாக அமைந்தது. இதன் விளைவாகக் கடுமையான அதிகாரப் போட்டி ஏற்பட்டது.

முரண்பாடாக, இரு சிங்கள ஜனாதிபதி வேட்பாளர்களும், சிங்கள தேசியவாத போக்கைப் பின்பற்றியவர்கள், தமிழர்களின் வாக்குகளில் தங்கியிருந்ததால், தமிழர்களின் கவலைகள் (எ.கா. இடம்பெயர்ந்தவர்களின் மீள்குடியேற்றம் மற்றும் நடமாட்டம் மீதான கட்டுப்பாடுகளை நீக்குதல்) தேர்தல் நேரத்தில் ஓரளவு உணர்திறனைக் காட்டினர். ஜனாதிபதி ராஜபக்ஷவின் வெற்றி, அவரது கைகளில் அதிகாரத்தை மேலும் உறுதிப்படுத்துவதற்கு வழி வகுத்தது.

எவ்வாறாயினும், துருவப்படுத்தப்பட்ட தேர்தல் பிரச்சாரமும் தேர்தலுக்குப் பின்னரான பதற்றமான சூழ்நிலையும் இலங்கை சமூகத்தில் ஆழமான கட்சி அரசியல் பிளவுகளையும் எதிர்காலத்தில் இலங்கை அரசியலில் ஆதிக்கம் செலுத்தக்கூடிய மோதல்களையும் சுட்டிக்காட்டியது.

போரின் இறுதியிலும் போருக்குப் பிந்தைய காலகட்டத்தின் ஆரம்பத்திலும் இலங்கையில் நிலவும் அதிகாரப் போட்டிகள் உலக அதிகாரப் போராட்டங்களுடன் நெருக்கமாகப் பின்னிப் பிணைந்துள்ளன.

2002 சமாதான முன்னெடுப்புகள் இலங்கை அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணப்பட வேண்டும் என்ற முக்கிய சர்வதேச செயற்பாட்டாளர்களான அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளின் ஒருமித்த கருத்தினால் ஊக்குவிக்கப்பட்டது.

மேலும், பயங்கரவாதத்திற்கு எதிரான உலகளாவிய யுத்தமானது, பயங்கரவாதத் தாக்குதல்களுக்குப் பதிலாக அமைதியான மோதலுக்குத் தீர்வு காண்பதற்குத் தமது விருப்பத்தைக் காட்டுவதற்கு விடுதலைப் புலிகளுக்கு ஊக்கமளித்தது. புலிகளின் பல போர்நிறுத்த மீறல்கள்,சிறுவர் ஆட்சேர்ப்பு மற்றும் அரசாங்கத்துடன் ஒத்துழைத்த தமிழர்களைப் படுகொலை செய்தல், அவர்களுக்கு ‘பயங்கரவாதிகள்’ என்ற உலகளாவிய பிம்பத்தைத் திறம்பட ஒதுக்கியது, மேலும் 2006இல் ஐரோப்பிய ஒன்றிய பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் சேர்க்கப்படுவதற்குப் பங்களித்தது.

பயங்கரவாதத்திற்கு எதிரான உலகளாவிய போரின் ஒரு பகுதியாகப் புலிகளைத் தோற்கடிப்பதற்கான அதன் முயற்சிகளைச் சந்தைப்படுத்தக்கூடிய இலங்கை அரசாங்கத்தின் கைகளில் விளையாடியது.

போரின் இறுதிக் கட்டத்தில் பல மனித உரிமை மீறல்களுக்கு இலங்கையை மேற்கத்தியச் சக்திகள் விமர்சித்தாலும், அவற்றைத் தடுக்க திறம்படத் தலையிட முடியவில்லை, மற்ற சர்வதேச அரங்காடிகள் போருக்கு தங்கள் ஆதரவை வழங்கினர். இலங்கையில் செல்வாக்கு பெறுவதில் ஆசியச் சக்திகளின் ஆர்வ, சீனா, பாகிஸ்தான், இந்தியா மற்றும் ஈரான் ஆகிய நாடுகளை இலங்கை அரசாங்கத்துடன் நெருக்கமான உறவுகளைத் தொடர வழிவகுத்தது - சில சமயங்களில் ஒன்றுக்கொன்று போட்டியாக. தேசிய அரசியல் அரங்கில், இந்த புதிய உலகளாவிய மற்றும் பிராந்திய யதார்த்தங்கள் இலங்கை அரசாங்கத்திற்கு மேற்கத்தியச் சக்திகளை ஏகாதிபத்தியவாதிகளாகக் கட்டமைக்க உதவியுள்ளன.

# ஆறு விருதுகளை வென்றது SLT-MOBITEL






SLT-MOBITEL, அண்மையில் நடைபெற்ற தேசிய செயற்திட்ட முகாமைத்துவ சிறப்பு விருதுகள் 2024இல் ஆறு பெருமைக்குரிய விருதுகளை தனதாக்கியிருந்தது. இந்த விருதுகளை சுவீகரித்ததனூடாக, புத்தாக்கமான தீர்வுகளில் முன்னோடியாக திகழ்தல், டிஜிட்டல் மாற்றத்தை முன்னெடுத்தல் மற்றும் இலங்கையர்களை வாழ்க்கைக்கு வளமூட்டல் ஆகியவற்றில் SLT-MOBITEL காண்பிக்கும் அர்ப்பணிப்பு மேலும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

செயற்திட்ட முகாமைத்துவத்தில் உயர்மட்ட நியமங்களை பெற்றுக் கொடுப்பதில் SLT-MOBITEL அணியினர் காண்பிக்கும் அர்ப்பணிப்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளதுடன், பல்வேறு துறைகளில் மாற்றங்களை முன்னெடுக்கக்கூடிய தீர்வுகளை பெற்றுக் கொடுக்கக்கூடிய ஆற்றலை வெளிப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது. நிறுவனத்தின் புரட்சிகரமான ஆய்வு மற்றும் அபிவிருத்தி திட்டமான 'Embryo' அணியினர், மூன்று தங்க விருதுகளை சுவீகரித்திருந்தனர்.

Embryo இனால் முன்னெடுக்கப்பட்டிருந்த GenAI-based enterprise knowledge hub தீர்வான 'The Aisle' திட்டத்துக்கு AI மற்றும் Data Science பிரிவில் சிறந்த நிர்வகிக்கப்பட்ட செயற்திட்டத்துக்கான தங்க விருது வழங்கப்பட்டிருந்தது. தாவரங்களில் நோய்களை இனங்காண்பதற்கான நிழல்படமெடுத்தலினூடாக இனங்காணும் தீர்வான 'GrowMentor' திட்டத்துக்கு, விவசாய மற்றும் கால்நடை அபிவிருத்தி பிரிவில் சிறந்த நிர்வகிக்கப்பட்ட செயற்திட்டத்துக்கான தங்க விருது வழங்கப்பட்டிருந்தது. அணியினால் முன்னெடுக்கப்பட்ட cloud மற்றும் ML அடிப்படையிலான வாகன தரிப்பு நிர்வகிப்பு தீர்வான 'Park n Pay' திட்டத்துக்கு, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப வலையமைப்புகள் மற்றும் தொடர்பாடல்கள் பிரிவில் சிறந்த நிர்வகிக்கப்பட்ட செயற்திட்டத்துக்கான தங்க விருது வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தது. மேலும், தொழிற்சாலை தன்னியக்கமயப்படுத்தலுக்கான AI மற்றும் IoT அடிப்படையிலான தீர்வான 'SenseGrid' க்கு உற்பத்தித்துறையில் சிறந்த நிர்வகிக்கப்பட்ட செயற்திட்டத்துக்கான வெள்ளி விருது வழங்கப்பட்டது.

இதர வெள்ளி விருதுகளை சுவீகரித்த SLT-MOBITEL செயற்திட்டங்களில், local demands மற்றும் freelance messengers இணைப்பை ஏற்படுத்தும் மொபைல் சந்தைப்பகுதியான 'Duthaya Mobile App' க்கு, புத்தாக்கமான செயற்திட்டத்தில் சிறந்த நிர்வகிக்கப்பட்ட செயற்திட்டத்துக்கான விருது வழங்கப்பட்டிருந்தது. ஐக்கிய அரபு இராஜ்ஜியத்திலுள்ள இலங்கை தூதரகத்துக்கு முழு செயற்திறனைக் கொண்ட மொபைல் அப்ளிகேஷனை, SLT-MOBITEL இன் Global Business SBU அணி வடிவமைத்திருந்ததுடன், SLT IT அணியினால் மென்பொருள் வடிவமைப்பு பணிகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இதற்கு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவைகள் தீர்வுகளில் சிறந்த நிர்வகிக்கப்பட்ட செயற்திட்டத்துக்கான வெள்ளி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டிருந்தது.

இலங்கை செயற்திட்ட முகாமைத்துவ நிறுவகம் (PMI) கொழும்பு பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேசிய செயற்திட்ட முகாமைத்துவ சிறப்பு விருதுகள், வருடாந்தம் ஏற்பாடு செய்யப்படுவதுடன், இலங்கையில் செயற்திட்ட முகாமைத்துவத்தில் பல்வேறு துறைகளில் முன்னெடுக்கப்படும் சிறந்த செயற்திட்டங்களை இனங்கண்டு கௌரவிக்கும் வகையில் அமைந்துள்ளது.

# கொமர்ஷல் வங்கிக்கு இரண்டு தங்கம்



நிலைபேண்தகைமைக்கான வெற்றிக் கதைகளை அங்கீகரிப்பதற்காக கைத்தொழில் அபிவிருத்தி சபை (IDB) வழங்கிய பசுமைத் தொழில் விருதுகள் 2024இல் கொமர்ஷல் வங்கி இரண்டு தங்கங்கள் உட்பட மூன்று விருதுகளை வென்றுள்ளது.

இலங்கையின் முதல் 100% காபன் நடுநிலை வங்கியான கொமர்ஷல் வங்கிக்கு குறைந்த காபன் மற்றும் அல்லது காலநிலை-மீள்திறன் உற்பத்திக்கான' தங்க விருது வங்கியின் காபன்-நடு நிலைக்கான பயணத்தின் நேர்மறையான தாக்கங்களுக்காக வழங்கப்பட்டதுடன் மற்றும் 'பசுமை டிஜிட்டல் மற்றும் தகவல் தொழில்நுட்பங்களுக்கான' தங்க விருது பரந்த அளவிலான வாடிக்கையாளர்களால் டிஜிட்டல் வங்கியை ஏற்றுக்கொள்வதில் வங்கியின் வெற்றிக்காக வழங்கப்பட்டது. இந்நடவடிக்கைகள் மூலம் வங்கியானது நிதி உள்ளடக்கத்தை மேம்படுத்துவதுடன் மற்றும் சுற்றுச்சூழல் பாதிப்பைக் குறைக்கிறது.

கொமர்ஷல் வங்கியானது, காலநிலை மாற்றத்தை எதிர்கொள்வது, சுற்றுச்சூழல் நிலைத்தன்மையை ஊக்குவித்தல் மற்றும் சுற்றுச்சூழலுக்கு உகந்த செயல்பாடுகளை ஊக்குவித்தல் ஆகியவற்றை இலக்காகக் கொண்ட முயற்சிகளில் பசுமை நிதியளிப்பில் அதன் முன்னோடி பங்கை அங்கீகரிக்கும் பொருட்டு 'உள்ளடக்கிய வர்த்தக அபிவிருத்திக்காக' வெண்கல விருதையும் வென்றது.

கொமர்ஷல் வங்கியின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சனத் மனதுங்க கருத்துத் தெரிவிக்கையில், கொமர்ஷல் வங்கியானது, பன்முகத்தன்மை, உள்ளடக்கம், வெளிப்படைத்தன்மை மற்றும் சமூக சமத்துவம் ஆகிய கொள்கைகளை உள்ளடக்கிய நிலைத்தன்மைக்கான முழுமையான அணுகுமுறைக்கு மாற்றியமைக்க முடியாத வகையில் தன்னை அர்ப்பணித்துள்ளது.

'இந்தத் துறையில் எங்களின் பன்முக முயற்சிகள் ஏற்கனவே பலனைத் தந்துள்ளன, வாழ்வாதாரத்தை உருவாக்கும் அதே வேளையில் நமது சுற்றுச்சூழலுக்கான வளமான, அர்த்தமுள்ள இருப்புக்கு நாம் பங்களிக்கிறோம் என்பதையே இது உணர்த்துகிறது. தொடரும் இந்த பயணத்தில் நாம் அடைந்து வரும் முடிவுகளுக்கு இந்த விருதுகள் ஒரு பொருத்தமான அங்கீகாரமாகும்'.

'குறைந்த காபன் மற்றும் காலநிலை-மீள்தன்மை உற்பத்திக்கான IDBஇன் தங்க விருதானது கொமர்ஷல் வங்கியானது 85 கிளைகளில் சூரிய மின்சக்தி அமைப்புகளை நிறுவியதன் மூலம் 2017 முதல் 2022 வரையான காலப்பகுதியில் மின் நுகர்வினை கருத்தில் கொள்ளும்போது மாதத்திற்கு 239,080 kWh மின்சாரத்தை உற்பத்தி செய்வதால், 16,404 Gigajoules மின்சாரம் குறைந்ததையும் அங்கீகரிக்கிறது.

'பசுமை டிஜிட்டல் மற்றும் தகவல் தொழில்நுட்பங்களுக்கான' தங்க விருது, சுற்றுச்சூழல் நிலைத்தன்மை மற்றும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சி ஆகிய இரண்டிற்கும் தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதில் கொமர்ஷல் வங்கியின் வெற்றியை அங்கீகரிக்கிறது. வங்கி 2022 மற்றும் 2023ஆம் ஆண்டுகளில் டிஜிட்டல் பரிவர்த்தனைகளில் முறையே 206% மற்றும் 80% வளர்ச்சியை அடைந்ததுடன் அந்த இரண்டு ஆண்டுகளில் கிட்டத்தட்ட ஒரு மில்லியன் இணையத்தள பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பசுமை நிதியியல் துறையில், கொமர்ஷல் வங்கியின் பசுமை கடன் வழங்கல் துறையானது 2023ஆம் ஆண்டின் இறுதிக்குள் துறையில் 55% புத்தாக்க எரிசக்தி திட்டங்களுக்கு நிதியளிப்பது மற்றும் 16% காலநிலை ஸ்மார்ட் விவசாயத்திற்கான ஆதரவுடன் அதன் கடன் புத்தகத்தில் 2% க்கும் அதிகமான வளர்ச்சியை பதிவு செய்துள்ளது.

## World Vision Lanka+ Coca-Cola அறக்கட்டளை

# Drop-in பிளாஸ்டிக் சேகரிப்பை நிறுவின






Coca-Cola அறக்கட்டளை மற்றும் World Vision Lanka நிறுவனம் ஆகியவை, கொழும்பில் உள்ள உலக வர்த்தக மையத்தில் மூன்று புதிய Drop-in பிளாஸ்டிக் சேகரிப்பு வசதிகளை உலக சுற்றுச் சூழல் தினமான 2024 ஜூன் 5, அன்று நிறுவின.

ASPIRE திட்டத்தின் கீழ், இந்த நிகழ்வில் உலக வர்த்தக மையத்தின் முன்பாக திறப்பு விழாவும், PET பிளாஸ்டிக் போத்தல்களை தனியாக பிரித்தெடுத்து மீள்சுழற்சி செய்வதின் அவசியம் குறித்து சேகரிப்பாளர்கள் மற்றும் பார்வையாளர்களுக்கு அறிவை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்ட தகவல் விழிப்புணர்வு அமர்வுகளும் இடம்பெற்றன. மேலும், வீட்டில் இருந்து PET பிளாஸ்டிக் போத்தல்களை கொண்டு வருமாறும் அனைவரையும் ஊக்குவித்தன.

உலகவர்த்தக மையத்தில் சேகரிக்கப்படும் அனைத்து




PET கழிவுகளும் முறையாக தனியே பிரிக்கப்பட்டு மீள்சுழற்சி செய்யப்படுவதை இந்த ஒத்துழைப்பு உறுதிசெய்கிறது. உலக வர்த்தக மையத்தில் மூலோபாய முறையில் அமைக்கப்பட்டுள்ள 30 சேகரிப்பு நிலையங்கள் மூலம் PET சேகரிப் பை அதிகரிப்பதே ASPIRE திட்டத்தின் நோக்கமாகும்.

இந்த முயற்சி சமூகங்களை ஊக்குவிப்பதோடு, நிலையான கழிவு நிர்வகிப்பதையும் மேம்படுத்தி, திட்டத்தின் ஒட்டுமொத்த இலக்குகளை அடைய உதவுகிறது.

## SPARK 2024 இளம் தொழில் முனைவோர் போட்டிக்கு

# விண்ணப்பம் கோரல்


■ புஷ்பராஜா மயூரதி

நாட்டின் அனைத்துப் பாகங்களிலும் உள்ள ஆர்வமுள்ள இளம் தொழில் முயற்சியாளர்களை ஈர்ப்பதற்கும் அவர்களை வலுப்படுத்தும் நோக்கிலும் வடிவமைக்கப்பட்டுள்ள தேசிய மட்டத்திலான போட்டித் தளமான SPARK திறமையான இளம் தொழில்முனைவோர் போட்டியானது 2024ஆம் ஆண்டுக்கான விண்ணப்பங்களைக் ஏற்றுக்கொள்ளத் தொடங்கியுள்ளது.

நாடு முழுவதிலும் உள்ள 15 முதல் 30 வயதுவரையிலான இளம் தொழில்முனைவோர் இதில் பங்கெடுப்பதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

SPARK என்பது தொழில்முனைவு தொடர்பில் புதிய யோசனைகளைக் கொண்டுள்ள பாடசாலை மாணவர்கள் மற்றும் இளைஞர் யுவதிகளை இலக்குவைத்து இலங்கை வர்த்தக சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்படும் போட்டி என்பதுடன், பாடசாலைப் பிரிவு மற்றும் திறந்த பிரிவு ஆகிய இரண்டு பிரதான பிரிவுகளின் கீழ் போட்டிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. வளர்ந்துவரும் தொழில் முனைவோர் தமது யோசனைகளை வெற்றிகரமான வணிகமாக மாற்றுவதற்கான திறனை மேம்படுத்துவது இந்தப் போட்டியின் நோக்கமாகும்.

இது தொடர்பில் தெளிவுப்படுத்தும் ஊடகவியலாளர் சந்திப்பு, Chamber of commerce கட்டடத்தொகுதியில், புதன்கிழமை (17) நடைபெற்றது. இதன்போது இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி புவனேகபாகு கூறியதாவது, "இளம் தொழில்முனைவோரின் முன்னேற்றம் என்ற விடயத்துக்கு நாம் முன்னுரிமை அளித்திருப்பதுடன், இலங்கையின் எதிர்கால வர்த்தகத்துறையில் இளம் தொழில்முனைவோரின் வகிபாகத்தை அங்கீகரித்துள்ளோம். தனியார் துறையில் உள்ள எமது பங்காளர்களின் தீவிரமான ஒத்துழைப்புடன் SPARK தளத்தை விஸ்தரிப்பதற்கும், இளையோர்




மத்தியில் அபிலாஷைகளை வளர்த்து. இலங்கையின் அடுத்த தலைமுறை தொழில்முனைவோரின் திறனை வெளிக்கொண்டுவருவதிலும் நாம் உறுதியாக இருக்கின்றோம். இந்த வருட போட்டியாளர்களுக்கு விறுவிறுப்பான போட்டியொன்று காத்துக்கொண்டிருப்பதால், திறன் மிக்க இளைஞர் யுவதிகளின் பங்களிப்பை ஊக்குவிக்குமாறு பெற்றோர் மற்றும் கல்வியாளர்களிடம் நாம் கேட்டுக்கொள்கின்றோம்" என்றார்.

SPARK 2024போட்டிக்கு சர்வதேச தொழிலாளர் தாபனம், தெற்காசிய தொழில்முனைவுத் தலைமைத்துவத் திட்டம் என்பன அனுசரணை வழங்கியிருப்பதுடன், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் நிதி உதவி அளிக்கின்றது. ஆரம்ப வணிகங்களுக்கான சூழலை ஏற்படுத்துவது மற்றும் தொழில்முனைவில் ஆர்வத்தைத் தூண்டுவதன் மூலம் இலங்கையில் இளம் தொழில்முனைவோரை ஊக்குவிக்கும் நோக்கில் இந்த ஒத்துழைப்பு வழங்கப்படுகின்றது.

SPARK 2024 திறமையான இளம் தொழில்முனைவோர் போட்டியின் இறுதிப் போட்டி செப்டெம்பர் மாதம் நடைபெறும் தொழில்முயற்சி தொடர்பான இலட்சியத்தைக் கொண்ட மாணவர்கள் மற்றும் இளம் கண்டுபிடிப்பாளர்களை https://spark chamberik/ என்ற இணையத்தள இணைப்பின் மூலம் இப்போட்டிக்கு விண்ணப்பிக்குமாறு அழைக்கின்றோம். விண்ணப்ப முடிவுத் திகதி 2024 ஜூலை 30ஆம் திகதியாகும்.



# "HNB Finance இன் நிதி கல்வியறிவு பட்டறை"

இலங்கையின் முன்னணி நிதி நிறுவனங்களில் ஒன்றான HNB Finance PLC, இந்த வருடத்தின் மூன்றாவது மற்றும் நான்காவது பயிற்சிப்பட்டறை நிகழ்ச்சித் திட்டங்களை குருநாகல் மற்றும் கேகாலை மாவட்டங்களை மையமாகக்கொண்டு அண்மையில் நடத்தியது.

இதனூடாக நுண் மற்றும் சிறிய அளவிலான தொழில் முனைவோருக்கு நிதியறிவை மேம்படுத்துவதே பிரதான நோக்கமாகும். HNB Finance இன் நிறுவன சமூகப்பொறுப்புணர்வு அணுகுமுறையின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட இந்நிறுவனம், கடந்த சிலவருடங்களாக நாட்டின் பல்வேறு மாகாணங்களில் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்ச்சிகளின் மூலம் ஆயிரத்துக்கும் மேற்பட்ட நுண் மற்றும் சிறிய அளவிலான தொழில் முயற்சியாளர்களின் நிதி அறிவைமேம்படுத்த முடிந்துள்ளது.

சமீபத்தில் நடைபெற்ற இரண்டு நிகழ்ச்சிகளில் பங்கேற்ற தொழில் முனைவோர்களில் மிகவும் ஆக்கப்பூர்வமான யோசனைகளை முன்வைத்த தொழில் முனைவோருக்கு பரிசுகளை வழங்கவும் HNB Finance நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது.

"HNB Finance நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சமிந்த பிரபாத் கூறுகையில்,

"நிதியறிவு என்பது எந்தவொரு வணிகத்தின் அடிப்படை ஒழுக்கமாகும். நிதி அறிவு இல்லாமல் வணிகத்தை வெற்றிகரமாக நடத்துவது சாத்தியமில்லை. இந்நிலையைப்புரிந்து கொண்டு, நுண் மற்றும் சிறு வணிக சமூகத்தின் நிதி அறிவை அதிகரிக்க கடந்த சில ஆண்டுகளாக நாங்கள் நிறைய பங்களித்துள்ளோம், மேலும் இந்த திட்டத்தின் முதல் கட்டத்திலிருந்து தொழில் முனைவோருக்கு மிகவும் முறையாக நிதிகல்வியறிவை வழங்க முடிந்தது. சிறிய அளவிலானன நிறுவனங்களைத் தொடங்குவதற்கு மூலதனத்தை வழங்குவதில் இருந்து ஒவ்வொரு ஆதரவையும் வழங்குவதற்கும், அந்த வணிகங்களை சிறு மற்றும் நடுத்தர அளவிலான வணிகங்களுக்கு அல்லது அதற்கு அப்பால் தொடர்ந்து கொண்டு செல்வதற்கும் ஒருநிறுவனமாக நாங்கள் பணி யாற்றிவருகிறோம்" என தெரிவித்தார்.




## ‘ஓய்ந்த பின்பும் ஓயாத அழைப்புக்கள்’

சமூக செயற்பாட்டாளரும் இலக்கியச் செயற்பாட்டாளருமான திருமதி.றொசில்டா அன்டனின் முதலாவது சிறுகதை தொகுப்பான ‘ஓய்ந்த பின்பும் ஓயாத அழைப்புக்கள்’ என்னும் நூலானது ஞாயிற்றுக்கிழமை (21) காலை 9.45 மணிக்கு வெளியிடப்படவுள்ளது.

திருகோணமலை நகராட்சி மன்ற பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ள இந்நூல் வெளியீட்டு விழாவிற்கு, கலை இலக்கிய ஆர்வலர்களை, ‘எண்ணம் போல் வாழ்க்கை’ கலை இலக்கிய மன்றத்தினர் அன்புடன் அழைக்கின்றனர்.

## ‘செப்டெம்பர் கருப்பழகி’

ஜனரஞ்சக எழுத்தாளர் மொழிவாணன், தினகரன் வாரமஞ்சரி பத்திரிகையில் தொடராக எழுதி வெளிவந்த ‘செப்டெம்பர் கருப்பழகி’ எனும் துப்பறியும் நாவலின் வெளியீட்டு விழா கொட்டாஞ்சேனை ஐங்கரன் மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (14) நடைபெற்றது.

இதில் பிரதம விருந்தினராக முன்னாள் பிரதி அமைச்சரும் ஜனநாயக மக்கள் காங்கிரஸின் தலைவரும் ‘செப்டெம்பர் கருப்பழகி’ நாவலின் பதிப்பாசிரியருமான பிரபா கணேசன், சர்வதேச உயர் கல்வி நிறுவனத்தின் IDMNC இன் தவிசாளரும், ஜனனம் அறக்கட்டளையின் தலைவருமான கலாநிதி ஜனகன் விநாயகமூர்த்தி ஆகியோர் பங்கேற்றனர்.






## ‘அந்த கல்முனைக்குடி நாட்கள்’

முனீரா அபூபக்கர்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான நிசாம் காரியப்பரின், ‘அந்த கல்முனைக்குடி நாட்கள்’ எனும் கவிதைத் தொகுதி வெளியீட்டு நிகழ்வு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம் (BMICH) லோட்டஸ் மண்டபத்தில் சனிக்கிழமை (20) பி.ப. 3.30க்கு நடைபெறவுள்ளது.

நிகழ்வில், விசேட அதிதிகளாக பாராளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம், ஓய்வு பெற்ற வெளிநாட்டு அமைச்சின் அதிகாரியும் இலங்கைக்கான முன்னாள் தூதுவருமான எச்.ஏ. அஸீஸ், தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் தமிழ் பேராசிரியர் ரமீஸ் அப்துல்லாஹ் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.










## ‘தூண்டில்கள் துடிக்கின்றன’

கம்மல்துறை கவிஞர்களின் 100 கவிதைகள் தொகுக்கப்பட்ட ‘தூண்டில்கள் துடிக்கின்றன’ கவிதை நூல் வெளியீட்டு விழாவும், கவியரங்கும் நீர்கொழும்பு, கொச்சிக்கடை, கம்மல்துறை அல்-பலாஹ் கல்லூரியின் கேட்போர் கூடத்தில் ஞாயிற்றுக்கிழமை (14) நடைபெற்றது.

கலை இலக்கிய வட்டத்தின் தலைவர் கலா பூஷணம் எம்.ஜே.எம்.தாஜுதீன் தலைமையில் நடைபெற்றது.

## ‘வெய்துயிர்த்தல்’ கவிதை நூல் வெளியீடு

ரஸீன் ரஸ்மின்

கவிஞர் பெரியமடு நிஹ்றி எழுதிய ‘வெய்துயிர்த்தல்’ கவிதை நூல் வெளியீட்டு விழா, புத்தளம் ஐ.பி.எம். மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (07) இடம்பெற்றது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஆலோசகரும், புரவலர் புத்தகப் பூங்கா ஸ்தாபகருமான புரவலர் ஹாஷிம் உமர் முன்னிலையில், கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி சபா அதிரதன் தலைமையில் இந்த கவிதை நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில், பிரதம அதிதியாக வடமத்திய மாகாண கூட்டுறவு ஆணையாளர் ஜே.றலியுதீனும், சிறப்பு அதிதியாக தினகரன் மற்றும் வாரமஞ்சரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் செந்தில் வேலவரும் கலந்துகொண்டதுடன், கவிஞர்கள், கல்விமான்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.







## சாமரம் வீசலாம்

உப்புச் சிரட்டைக்குள்ளாவது
குதித்து சாக வேண்டுமென
எண்ணங்களை தோற்றுவித்து
வைக்கிறது இணையச் செய்திகள்...

மரவட்டைப் புழுவை
ரயிலென ஆர்ப்பரித்து பார்க்கும்
மனங்களில்
கேட்பார் புத்தி பொங்கிவழிய
நிரம்பி ததும்புகிறது
சுயநிர்ணயம்...

பொழுது புலர்கையில்
புதிய தலைவர்களை
தோற்றுவித்து கொண்டாடும்
இனத்தின் நடுவில்
நின்று கொண்டு இருக்கும்
ஒருவனுக்கோ
ஒருத்திக்கோ
ஏன் ஆடைக் கலாசார ஆசைகள்...

அம்மணக்குண்டிகளுடன்
சாமரம் வீச
இப்போது எல்லோரும்தானே
பழக்கப்பட்டு விட்டோம்
சுதந்திர மண்ணில்...


காரையன் கதன்

## அந்தச் சொர்க்கத்தின் சுகங்கள்...

கொஞ்சமாய் சம்பளம்
குறைவின்றிவாழ்ந்தோம்...
அதில் மிச்சமும் பிடித்து
நகைகளும் வாங்கினோம்...
ஐந்து நாட்கொண்டாட்டங்கள்
கலியாணங்கள்
கோயில் திருவிழாக் குதூகலங்கள்...
சின்னமேளக் கச்சேரிகள்...

பண்டிகைகள் வந்தாலும்
சமாளித்து உடுப்புகளை வாங்கியும்
பலகாரங்கள் செய்தும்
கூடிக்குலவி கொண்டாடினோம்...
ஏழையாயிருந்தாலும் ஏதோ
தொழில் செய்தோம்...
இருந்ததைக்கொண்டு
திருப்தியும் கொண்டோம்...

மூத்த பரம்பரைகளுடன்
சேர்ந்துண்டு வாழ்ந்தோம்
ஏழெட்டுப் பத்துப் பிள்ளைகளால்
குடிசைகள்
நிரம்பி வழிந்தாலும் பங்கிட்டு
உண்டு பாசத்தில் நனைந்தோம்...

கால் நடையில் பள்ளிக்கு
காலில் செருப்புமில்லை
பள்ளி உடுப்பு ஒன்றுதான்
மாறிமாறி தோய்த்து
போத்தலில் சுடுதண்ணீர் விட்டு
ஸ்திரி செய்து உடுப்பை
காய்ந்தும் காயாதுமாக
பள்ளிக்குக் போட்ட காலங்கள்...

எண்ணும்போது கவலை வரவில்லை
களிப்புத்தான் வருகின்றது.
இப்படியும் வாழ்ந்து
எளிமையுடன் திகழ்ந்த அவ்வாழ்வு
சொர்க்கத்தின் சுகங்களாய்.

மாலைவேளையில் வீடெல்லாம்
குதூகலம்.
கிட்டிப்புள்ளுபோளை இலுப்பைக்
கொட்டை அடித்தல்கள்
கிளித்தட்டிகெந்தியடித்தல்
புது வருடம் வந்தால்
போர்த் தேங்காய் அடித்து வெல்லும்
சவாலில் பெரியவர் முதல்



இளையவர் வரை.
உச்சிவானத்தை தொட்டு வரும்
ஊஞ்சல் விளையாட்டுக்கள்.

ஒரு நேரம் உண்டாலும்
பசியால் துவளாத ஆனந்தங்கள்
அப்பப்பா...
இன்றைய நவீனத்தில்
கை நிறைய எடுத்தாலும்
கடன் பழுச் சுமைகளால்
இனிய குதூகலங்களைத் தொலைத்த
ஏக்கங்கள்...

ஒன்றிரண்டு பிள்ளைகளுக்கு மேல்
பெற்றால் ஊட்டி வளர்க்க முடியாது
அல்லாடும் நிலைமைகள்.
இருவர் உழைத்தும் உறவில் விரிசல்கள்
இடைவிலகல் இல்லறங்கள்...

தொலைந்துபோன சந்தோஷங்களை
தேடுகிறோம் தேடுகிறோம்...
பகட்டே வாழ்க்கையானதால்
பகலிரவு உழைத்தும் பஞ்சப்பாட்டுகள்
உதடுகள் சிரிக்க உள்ளத்தினுள்ளே
எரிந்து கொண்டிருக்கின்றது
ஏக்கத்தின் வடுக்கள்..!


ஷெல்லிதாசன்

## தனிமை

முன்னர் அவள் வசம்
மகிழ்வானநாட்கள் இருந்தன
மன ஆழத்தே பதிந்து பத்திரமாய்
வாசம் மங்காநினைவோடு
தனித்த இந்நாள்
இரை மீட்கிறாள்
ஒவ்வொன்றாய்
ஒவ்வொன்றாய்...

தனியே பேசி
அதிமகிழ் நினைவெழுகையில்
சிரித்து,
மனதில் பதித்த பிள்ளைகளின் உருவில்
குழந்தையாகி
மரணித்த கணவன் நினைவில்
யாரும் காணாது அழுது...

முதியோர் இல்லப் படுக்கையில்
இற்றைப் பொழுதுறங்கி
விடையற்ற வினாக்கள் சேர்த்து
மனசொட்டா வாழ்வு வாழும் தாய்

தூக்கமும் நினைவும்



சிறகுகள் உடைந்த தனிமையும்
வெண்மையும் கருமையும்
கலந்தோடும் மேகங்களாய்
அவளும் முதுமையும்
நரையும் திரையும்

முன்னர் அவளிடம்
பல நாட்கள் இருந்தன
நலமுடன் இருந்தாள்
மகிழ்ச்சியாக பூக்களின் மத்தியில்
அப்போது
அவளைச் சுற்றிகிளைகளென
உறவுகள் படர்ந்திருந்தன.


பாலையூற்று
அஷ்ரபா நூர்தீன்



பங்களாதேஷ்

வன்முறைகளால் நிரம்பி வழியும்

# பங்களாதேஷ்

மக்களாட்சி நாடான பங்களாதேஷ், தற்போது வன்முறை சம்பவங்களால் பற்றி எரிந்து வருகிறது. ஒவ்வொரு நகரிலும், ஒவ்வொரு வீதியிலும் கொழுந்து விட்டு எரிகிறது கலவர நெருப்பு. இந்தப் பரபரப்புக்கெல்லாம் காரணம், உரிமைப் போராட்டமாகும்.

இந்தியா - பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு, தனி நாடாக இயங்கிய பாகிஸ்தான், மேற்கு பாகிஸ்தான், கிழக்கு பாகிஸ்தான் என்று சொல்வழக்கில் அறியப்பட்டது. அப்போது, கிழக்கு பாகிஸ்தான் முழுவதும் வங்க மொழி பேசும் மக்களே வசித்தனர். ஆனால், இந்தப் பகுதியை பாகிஸ்தான் அரசு புறக்கணித்தது. தேர்தல் முடிவுகளிலும் குளறுபடிகளைச் செய்தது. இதனால் பாகிஸ்தான் அரசுக்கெதிராக தொடங்கிய கிளர்ச்சி, போராக மாறியது.

இந்தப் போரில் 5 இலட்சம் பேர் வரை கொல்லப்பட்டிருக்கலாம் என கணக்கிடப்பட்டது. ஏராளமானோர் காணாமல் போயினர். பின்னர் 2018இல் வெடித்த மாணவர்கள் புரட்சியின் காரணமாக, இந்த இட ஒதுக்கீட்டு முறை இரத்து செய்யப்பட்டது.

இந்நிலையில், தற்போது பங்கதேஷில் அரியணையில் இருக்கும் அவாமி லீக் கட்சி, விடுதலை வீரர்களின் சந்ததிகளுக்கு 30 வீத இட ஒதுக்கீடு வழங்குவதென முடிவு செய்துள்ளது. இதை எதிர்த்து, தொடரப்பட்ட வழக்கில், தீர்ப்பை ஒத்திவைத்துள்ளது அந்நாட்டு உச்சநீதிமன்றம்.

இந்த நிலையில்தான், இட ஒதுக்கீட்டு முறைக்கு எதிர்ப்பு தெரிவித்து தன்னெழுச்சியாக போராட்டங்களில் குதித்துள்ளனர் மாணவர்கள். இவர்களை, ஆளுங்கட்சியின் மாணவர் அமைப்பான பங்களாதேஷ் சத்ரா லீக் அமைப்பினர், தாக்கி வருகின்றனர்.

மேலும், போராட்டத்தை முடக்கும் விதமாக, அவர்கள் தாக்குதல் நடத்தி வருவதால் பங்களாதேஷ் வீதிகள் வன்முறைக் களமாகியுள்ளது.

இப்போராட்டத்தில், இதுவரை 6 மாணவர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன், 400க்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



வட மேல் மாகாண 16 வயதுகுட்பட்டோருக்கான கால்பந்தாட்டம்:

# சம்பியனான புத்தளம் வெட்டாளை அசன்குத்தூஸ்



எம்.யூ.எம்.சனூன்

வடமேல் மாகாண எட்டு கல்வி வலயங்களின் 24 அதி சிறந்த பாடசாலைகளுக்கிடையிலான 16 வயதுக்குட்பட்ட கால்பந்தாட்டத் தொடரில் புத்தளம் வெட்டாளை அசன்குத்தூஸ் முஸ்லிம் மகா வித்தியாலயம் சம்பியனானது.

குருநாகல்- சியம்பலாகஸ்கொடுவ பாடசாலை மைதானத்தில் புதன்கிழமை (17) நடைபெற்ற வென்னப்புவ சென். ஜோன் பாடசாலையுடனான இறுதிப் போட்டியில் 4-2 என்ற கோல் கணக்கில் வென்றே வெட்டாளை அசன்குத்தூஸ் முஸ்லிம் மகா வித்தியாலயம் சம்பியனாகி அகில இலங்கை ரீதியிலான போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

இவ்வெற்றிக்காக வளப்பற்றாக்குறைக்கு மத்தியிலும் மாணவர்களுடன் இரண்டறக் கலந்து பயிற்சிகளை வழங்கிய பயிற்றுவிப்பாளர் எச்.என்.அம்லக் முஹம்மது, பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினர், பழைய மாணவர் சங்கத்தினர் ஆகியோருக்கு பெற்றோர்கள் மனமார்ந்த வாழ்த்துக்களையும் நன்றிகளையும் தெரிவித்துள்ளனர்.

ஜம்மு – காஷ்மீர்

சுதந்திரமாக சுற்றிவரும்

# இறந்துபோன பயங்கரவாதி



சர்வதேச பயங்கரவாத அமைப்பான ஜெய்ஷ் - இ - முகமதுவின் தலைவர் மசூத் அசார் இறந்து விட்டதாகவும், படுத்த படுக்கையாக இருப்பதாகவும் கூறப்பட்ட நிலையில், தற்போது அவர் பாகிஸ்தானில் சுதந்திரமாக சுற்றி வருவதாக செய்தி வெளியாகியுள்ளன.

ஜம்மு-காஷ்மீரில் கடந்த ஜனவரி 1 முதல் கடந்த 16ஆம் திகதி வரை நடந்த தொடர் பயங்கரவாத சம்பவங்களில் இராணுவ மேஜர் உட்பட 12 வீரர்கள் மற்றும் 10 பொதுமக்கள் உயிரிழந்துள்ளனர். 55 பேர் காயமடைந்துள்ளனர்.

சமீபத்திய பயங்கரவாதத் தாக்குதல்களில், உள்ளூர் பயங்கரவாத அமைப்புகளின் போர்வையில், ஜெய்ஷ் - இ - முகமது பயங்கரவாதிகள் ஈடுபட்டிருக்கலாம் என உளவுத்துறை கூறுகிறது.

துபாய்

இன்ஸ்டாவில் விவாகரத்து

# அறிவித்த டுபாய் இளவரசி




டுபாய் இளவரசி ஷேகா மஹ்ரா தனது கணவருக்கு இன்ஸ்டாவில் விவாகரத்து அறிவிப்பு வெளியிட்டமை பலரையும் அதிர்ச்சி அடைய வைத்துள்ளது.

டுபாய் மன்னர் ஷேக் முகமது பின் ரஷித் அல் மக்தூமின் ஐக்கிய அரபு அமீரகத்தின் துணை ஜனாதிபதியாகவும், பிரதமராகவும் பதவி வகிக்கிறார். உலகில் அதிக சொத்து உள்ள முதல் 10 அரச குடும்பத்தை சேர்ந்தவர்களில் ஷேக் முகமதுவிற்கு தனி இடம் உள்ளது.

இவரது மகள்களில் ஒருவர் ஷேகா மஹ்ரா. 30 வயதாகும் இவர், கடந்த ஆண்டு மே மாதம் ஷேக் மனா பின் முகமது பின் ரஷித் பின் மனா அல் மக்தூம் என்பவரை திருமணம் செய்து கொண்டார்.

12 மாதம் கழித்து குழந்தையையும் இந்த தம்பதி பெற்றெடுத்தது.

இந்த நிலையில், தனது கணவருக்கு இன்ஸ்டாகிராமில் விவாகரத்து அறிவிப்பை கொடுத்து, இளவரசி ஷேகா மஹ்ரா பலரையும் அதிர்ச்சியடைய செய்துள்ளார்.



மும்பை

துப்பாக்கியை காட்டி மிரட்டிய

# சர்ச்சை அதிகாரியின் தாயார் கைது

உள்ளூர் விவசாயிகளை துப்பாக்கியை காட்டி மிரட்டிய விவகாரத்தில் சர்ச்சைக்குப் பெயர் போன ஐ.ஏ.எஸ். அதிகாரி பூஜா கேத்கரின் தாயாரை பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

மஹாராஷ்டிராவைச் சேர்ந்த பூஜா கேத்கர், பயிற்சி ஐ.ஏ.எஸ். அதிகாரியாக பணியில் சேர்ந்த நிலையில், புனே உதவி கலெக்டராக நியமிக்கப்பட்டார்.

இந்நிலையில். அரசால் வழங்கப்படாத வசதிகளை இவர் அத்துமீறி பெற்றதாக குற்றச்சாட்டு எழுந்தது. மேலும், அவர் தன் சொகுசு காரில் அரசு பெயர் பலகை மற்றும் சிவப்பு - நீல சுழல் விளக்கு பயன்படுத்தியது சர்ச்சையை ஏற்படுத்தியது.

விதிமீறலில் ஈடுபட்டதை அடுத்து பூஜா, வாஷிம் மாவட்டத்துக்கு மாற்றப்பட்டு, தற்போது காத்திருப்போர் பட்டியலில் வைக்கப்பட்டுள்ளார்.

அதேசமயம், ஐ.ஏ.எஸ். பணியில் சேர்ந்தபோது, உடல் ரீதியான குறைபாடு மற்றும் இதர பிற்படுத்தப்பட்டோர் பிரிவுக்கான சான்றிதழ்களை முறைகேடாக சமர்ப்பித்ததாகவும் அவர் மீது குற்றச்சாட்டு எழுந்தது.

அடுத்தடுத்து குற்றச்சாட்டுகள் எழவே, பூஜா கேத்கரின் பயிற்சியை மத்திய அரசு நிறுத்தி வைத்தது.

இந்நிலையில், அடுத்த சர்ச்சையில் பூஜா சிக்கியுள்ளார். மஹாராஷ்டிராவில் உள்ள பல்கோன் கிராமத்தின் ஊர் தலைவராக பூஜாவின் தாய் மனோரமா உள்ளார். அவரும், அவரது கணவரும் நிலப்பிரச்சினையில் உள்ளூர் விவசாயிகளை துப்பாக்கியை காட்டி மிரட்டியதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

இது தொடர்பில், அவரை கைது செய்த பொலிஸார், இதுபற்றி மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

சென்னை

சிசுவை குத்திக் கொன்ற

# தந்தை கைது



பிறந்து ஒன்பது நாட்களேயான பெண் சிசு ஒன்று, வயிற்றில் காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

சென்னை வியாசர்பாடி பகுதியைச் சேர்ந்தவர்கள் ராஜ்குமார் (38) - விஜயலட்சுமி தம்பதியினர். இவர்களுக்கு ஐந்து மற்றும் இரண்டரை வயதில் இரண்டு பெண் குழந்தைகள் உள்ள நிலையில், கடந்த மாத இறுதியில் மீண்டும் ஒரு பெண் குழந்தை பிறந்துள்ளது.

கடந்த 7ஆம் திகதி காலை வீட்டில் குளித்துக் கொண்டிருந்த விஜயலட்சுமி வெளியே வந்து பார்த்துள்ளார். அப்போது சிசுவின் வயிற்றில் கத்திக் குத்து காயங்கள் இருந்ததை கண்டு அதிர்ச்சியடைந்த அவர், உடனடியாக எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனையில் அனுமதித்துள்ளார். ஆனால், சிகிச்சை பலனின்றி கடந்த 9ஆம் திகதி குழந்தை உயிரிழந்தது.

இந்த சம்பவம் குறித்து உரிய விசாரணை நடத்த வேண்டும் என மாவட்ட குழந்தைகள் நல பாதுகாப்பு அதிகாரி ப்ரதிஷ்டா என்பவர் புகார் அளித்தார். புகாரின் பேரில் வியாசர்பாடி பொலிஸார் தீவிர விசாரணை மேற்கொண்டனர்.

விசாரணையில், குழந்தையின் தந்தை ராஜ்குமார் கத்திரியால் மூன்று முறை குழந்தையை குத்திக் கொலை செய்தது தெரியவந்தது. இதையடுத்து அவரிடம் நடத்திய விசாரணையில், அடுத்தடுத்து பெண் குழந்தைகள் பிறந்ததால் ஆத்திரத்தில் கொலை செய்ததாக ராஜ்குமார் தெரிவித்துள்ளார்.

துடுப்பாட்டவீரர்களின் தரவரிசையில்

# முன்னேறினார் ஜைஸ்வால்



சர்வதேச கிரிக்கெட் சபையின் இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டிகளுக்கான துடுப்பாட்ட வீரர்களின் தரவரிசையில் ஆறாமிடத்துக்கு இந்தியாவின் யஷஸ்வி ஜைஸ்வால் முன்னேறியுள்ளார்.

சிம்பாப்வேக்கெதிரான இறுதி மூன்று போட்டிகளிலும் 141 ஓட்டங்களைப் பெற்றமையையடுத்தே 10ஆம் இடத்திலிருந்து நான்கு இடங்கள் முன்னேறி ஆறாமிடத்தை ஜைஸ்வால் அடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

1.ட்ரெவிஸ் ஹெட், 2.சூரியகுமார் யாதவ், 3.பில் ஸோல்ட், 4.பாபர் அஸாம், 5.மொஹமட் ரிஸ்வான், 6.யஷஸ்வி ஜைஸ்வால், 7.ஜொஸ் பட்லர், 8.ருத்துராஜ் கைகவாட், 9.பிரண்டன் கிங்க், 10.ஜோன்சன் சார்ள்ஸ்.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

1.அடில் ரஷீட், 2.அன்றிச் நொர்கியா, 3.வனிடு ஹசரங்க, 4.ரஷீட் கான், 5.ஜொஷ் ஹேசில்வூட், 6.அகீல் ஹொஸைன், 7.அடம் ஸாம்பா, 8. பஸல்ஹக் பரூக்கி, 9.மகேஷ் தீக்ஷன, 10.அல்ஸாரி ஜோசப்.

இதேவேளை மேற்குறிப்பிட்ட போட்டிகளில் 69 ஓட்டங்களைப் பெற்றதோடு, 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய சிம்பாப்வேயின் அணித்தலைவர் சிகண்டர் ராசா, சகலதுறைவீரர்களுக்கான தரவரிசையில் நான்காமிடத்திலிருந்து ஓரிடம் முன்னேறி மூன்றாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

1.வனிடு ஹசரங்க, 2.மார்க்கஸ் ஸ்டொய்னிஸ், 3.சிகண்டர் ராசா, 4.ஷகிப் அல் ஹஸன், 5.மொஹமட் நபி.

இதேவேளை, மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான முதலாவது டெஸ்டில் 50 ஓட்டங்களைப் பெற்ற இங்கிலாந்தின் ஹரி ப்ரூக், 10ஆம் இடத்திலிருந்து மூன்று இடங்கள் முன்னேறி ஏழாமிடத்தையடைந்துள்ளார்.

முதல் 10 துடுப்பாட்டவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

1.கேன் வில்லியம்சன், 2.ஜோ றூட், 3.பாபர் அஸாம், டரைல் மிற்செல், 5. ஸ்டீவ் ஸ்மித், 6.றோஹித் ஷர்மா, 7.ஹரி ப்ரூக், 8.யஷஸ்வி ஜைஸ்வால், 9.திமுத் கருணாரத்ன, 10.விராட் கோலி.

முதல் 10 பந்துவீச்சாளர்களின் தரவரிசை பின்வருமாறு,

1.இரவிச்சந்திரன் அஷ்வின், 2.ஜொஷ் ஹேசில்வூட், . ஜஸ்பிரிட் பும்ரா, 4.ககிஸோ றபாடா, 5.பற் கமின்ஸ், 6.நேதன் லையன், 7.இரவீந்திர ஜடேஜா, 8.ஜேம்ஸ் அன்டர்சன், 9.ஷகீன் ஷா அஃப்ரிடி, 10.கைல் ஜேமிஸன்.

முதல் ஐந்து சகலதுறைவீரர்களின் தரவரிசை பின்வருமாறு,

1.இரவீந்திர ஜடேஜா, 2.இரவிச்சந்திரன் அஷ்வின், 3.ஷகிப் அல் ஹஸன், 4.ஜோ றூட், 5.அக்ஸர் பட்டேல்.



கிளி. முருகானந்தா கல்லூரி விளையாட்டு மேம்பாட்டிற்காக

# கோல் கம்பங்கள், பந்துகள் வழங்கல்

நடராசா கிருஷ்ணகுமார்

கிளிநொசசி முருகானந்தா கல்லூரியின் மாணவர்களின் விளையாட்டு மேம்பாட்டிற்காக முருகானந்தா கல்லூரியின் பழைய மாணவர்கள் 95,000 ரூபாய் பெறுமதியான கோல் கம்பங்கள், கால்பந்ததுகள் என்பவற்றை திங்கட்கிழமை (15) அன்பளிப்பாக வழங்கினர்.

தற்போது மாகாண போட்டிக்கு கல்லூரியின் மாணவர் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் கோல் கம்பங்கள், பந்துகள் கிடைத்துள்ளமை பயனுள்ளதாக அமைந்துள்ளது.

மாணவருக்கான உபகரணங்களை வழங்கியுள்ள நிலையில் கால்பந்தாட்ட பயிற்றுநர் ஒருவரையும் நியமித்து அவருக்கான சம்பளத்தையும் பழைய மாணவர் அணி வழங்கி வருகின்றனர்.

கல்லூரியில் உடற்கல்வி ஆசிரியர் மற்றும் பயிற்றுநர்கள் இல்லாத நிலையில் பயிற்றுநரை வழங்கி இருப்பது மாணவர்களுடைய விளையாட்டுக்கு மிகவும் பயன்பாடாக அமைந்துள்ளது.



மட்டு. மத்தி வலய மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி:

# முதலிடம் பெற்ற ஏறாவூர் கோட்டம்

பேரின்பராஜா சபேஷ்

மட்டக்களப்பு-மத்தி கல்வி வலய பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் திறனாய்வுப் விளையாட்டுப் போட்டியில் ஏறாவூர் கோட்டம் முதலிடம் பெற்றது.

ஏறாவூர் டொக்டர் அஹமட் பரீட் பொது விளையாட்டு மைதானத்தில் புதன்கிழமை (17) நடைபெற்ற இறுதி நாள் நிகழ்வுகளின் முடிவில் பாடசாலைகளின் அடிப்படையில் அதிகூடிய புள்ளிகளைப் பெற்று ஏறாவூர் அல்.அஸ்ஹர் பெண்கள் உயர்தர பாடசாலை முதலாமிடத்தைப் பெற்றது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 19, ஜூலை 2024, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.